www.padippakam.com



# எழுச்சி



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உத்தியோக பூர்வமான ஏடு ....... ரூ.2/—

குரல் — 6 TELO— Tamil Eelam Liberation Organization மார்ச் — 1985

# இயக்கங்கள் மேலும் இணைகின்றன....

## TELO, EROS, EPRLF கூட்டமைப்புடன் LTTE யும் இணைகிறது.

**தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய இயக்கங்களின் கூட்டமைப்புடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பொது வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்துள்ளது. இவ்வாறு அனைத்து விடுதலை இயக்கங்களும் தமிழீழ மக்களின் பாதுகாப்பான வாழ்விற்கு வழி வகுக்க ஒன்றுபடுமாறு வேண்டுகிறோம்.**

ஶ்ரீலங்கா இனவெறி அரசின் இராணுவக் கொடுங்கோன்மை தமிழீழ மக்களைக் கொன்று குவித்தும், மானபங்கப்படுத்தியும், அகதிகளாக விரட்டியடித்தும் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழீழ மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, விடுதலை இயக்கங்கள் தமக்குள் நிலவும் பல்வேறு பேதங்களையும் ஒரு புறம் மூட்டை கட்டி வைத்துவிட்டு இராணுவ ரீதியிலாவது ஒன்றிணைந்து செயலாற்றுவதே இன்றைய அவசர அவசியத் தேவை என்ற கருத்து பல இடங்களிலும் வலியுறுத்தப்பட்டு வந்ததை தமிழீழ மக்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (TELO), ஈழப் புரட்சி அமைப்பு (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகிய மூன்று இயக்கங்களும் தமக்குள் ஒரு கூட்டு முன்னணியை 1984 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் ஏற்படுத்தி இருந்தன.

மேற்படி மூன்று இயக்கங்களும் ஒன்றிணைந்து தமக்குள் கூட்டு முன்னணி அமைத்துக் கொண்டு விடுதலை இயக்கங்களின் ஒற்றுமைக்கான முன்னோடிகளாகத் திகழ்ந்த போது — தமிழீழ மக்கள் இந்த ஒற்றுமை கண்டு தமக்குள் பெருத்த நம்பிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

தமிழ் மக்களிடையே பல இயக்கங்கள் இருக்கிறதென்றும், இவ் இயக்களிடையே மேலும் மோதல்களை ஏற்படுத்தியே இவற்றை பூண்டோடு அழித்துவிடலாம் என்றும்; ஶ்ரீலங்கா இனவாத அரசின் தேசிய பந்தோபஸ்த்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொல்லிக் கொண்டிருந்த ஒரு வேளையில் தான் அவரின் முகத்திலடித்தாற் போல் TELO, EROS, EPRLF ஆகிய மூன்று இயக்கங்களும் தமக்குள் இந்தக் கூட்டமைப்பை ஏற்படுத்தி ஒரு சாதனையைச் சரித்திரமாக்கின.

தமிழ் மக்கள்படும் உண்மையான துயரங்களைப் புரிந்து கொள்ளாதவர்களாக இருந்த சிலர், ஒரு காலத்துச் சாதி வெறிக்கொப்பாகத் தமிழ் இளைஞர்களிடையே, இயக்க வெறியினையும், மோதுதல்களையும் ஏற்படுத்துவதிலே மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒரு கால கட்டத்தில் தான் இந்த TELO, EROS, EPRLF கூட்டமைப்பு என்கிற நம்பிக்கைக் கதிரவன் இருள் கிழித்து உதயமானான். இந்தப் பொது நோக்கின் மகத்துவத்தைப் புரிந்து கொண்டு நமது மக்கள் எல்லா இடங்களிலும் இவ் ஒற்றுமையை முன்னுதாரணமாகக் காட்டி பேசி மகிழ்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இவை தவிர்ந்த ஏனைய இயக்கங்களையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளும் தொடர்ச்சியாக இடம் பெற்று வந்தன.

தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடும் இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்பது — எங்கள் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபக கர்த்தாவாகிய தமிழ் ஈழ

(10ம் பக்கம் பார்க்க)

## மக்கள் விரோத நடவடிக்கைகளை TELO வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ் ஈழம் இன்று பிணக்காடாக காட்சியளிக்கிறது. ஶ்ரீ லங்கா தரகு — முதலாளித்துவ அரசின் கொடிய கறை படிந்த கரங்களுக்குள் தமிழ் ஈழ மக்கள் பரிதவிக்கிறார்கள். இன வெறியர்களின் கொலை வெறியாட்டம் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. நாளை உயிரோடு இருப்போமா என்ற சந்தேகத்துடனேயே தமிழ் ஈழ மக்கள் வாழ்கிறார்கள்.

நாளாந்தம் அல்லல்படும் தமிழ் மக்கள் விடுதலை இயக்கங்களையே நம்பியிருக்கின்றார்கள். இந் நிலையில், விடுதலைப் போராளிகள் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன், மக்கள் துன்பங்களில் பங்கு கொண்டும் — மக்களுடன் மக்களாக பழகி மக்களில் தங்கி வாழும் போது தான் விடுதலைப் போராட்ட முன்னெடுப்புகளில் வெற்றி காண முடியும்.

இதை உணராத சில பிற்போக்கான தேச விரோதக் கும்பல்கள் விடுதலை இயக்கம் என்னும் போர்வையில் ஶ்ரீ லங்கா இராணுவத்துடன் மோத முடியாத கையாலாகாத்தனத்தால் தமிழ் மக்களின் உடைமைகளை கொள்ளையடிப்பது — வாகனங்களை தேவையற்று கடத்துவது — பணயம் வைத்து பணம் வசூலிப்பது போன்ற குட்டி முதலாளித்துவ அராஜக வேலைகளை தமிழ் மக்கள் மேல் செய்து

(2ம் பக்கம் பார்க்க)

## செர்னங்கோவின் மறைவுக்கு தமிழ் ஈழ மக்களின் அஞ்சலி.

ஏகாதிபத்திய நாடுகளும், அதன் அடிவருடிகளும் இன்று மூன்றாம் உலக மகா யுத்த தயாரிப்பில் முழு மூச்சாக இறங்கியுள்ளனர். மனிதனை வாழ வைக்க தேவையான ஆராய்ச்சியை விட மனித குலத்தையே அழிப்பதற்கான ஆராய்ச்சியில் ஏகாதிபத்திய நாடுகள் பெரும் சாதனைகளை புரிந்துள்ளன. தரையிலும், வானிலும், கடலிலும் ஏன்? விண்வெளியிலும் நாசகார ஆயதங்களை நிறுத்துவதற்கான போட்டி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இன்றோ நாளையோ உலக யுத்தம் வரலாம் என மனித குலம் ஏங்கித் தவிக்கிறது. ஓர் உலக யுத்தம் நிகழுமேயானால் அதன் விளைவுகளை எண்ணிப் பார்க்கவே முடியாது. அதன்பின் மனிதகுலம் பூமியில் நடமாடுமோ என்பதும் சந்தேகமே?

(3ம் பக்கம் பார்க்க)



மறைந்த ரஷ்ய அதிபர் செர்னென்கோ.

**ரெலோவின் புரட்சிகர மக்கள் எழுச்சிக்குரல்**

படிப்பகம்

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# விடுதலைக் குரல்

சர்வதேச ரீதியாக, ஒடுக்கப்படும் இனங்கள் மேற் கொள்ளும் விடுதலைக்கான போராட்டங்களை பற்பல தந்திரங்களையும்—அதி நவீன ஆயுதங்களையும் பாவித்து அடக்கி ஒடுக்க முனைந்து செயல்ப்பட்டுக் கொண்டிருக் கும்—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இரத்தம் தோய்ந்த கொடிய கரங்களுடன் கரமிணைத்துக் கொண்டு, இன வெறித்தீயை வளர்த்து அதில் குளிர் காய்ந்து கொண்டு தனது அரசியல் லாபம் கருதிச் செயல்பட்டு வருகின்றது ஸ்ரீலங்கா தரகு முதலாளித்துவ அரசு.

இவ் இனவெறி கொண்ட ஸ்ரீலங்கா தரகு முதலாளித்துவ அரசு, உலகில்—ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாக திகழ்ந்து கொண்டிருக்கும் நிறவெறி கொண்டலையும் அரசுகளான, தென்னாப்பிரிக்க நிறவெறி அரசு—சியோனிஸ இஸ்ரேல் போன்ற நாடுகளுடனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு பெரும் நெருக்கடிக்குள் தமிழ் பேசும் மக்களை இழுத்துவிட்டு, அவர் களின் உணர்வினை மழுங்கடிக்க தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றது.

நாளும் தமிழ் பேசும் மக்களை சடலங்கள் ஆக்கிக் கொண்டு ''எமது—பாதை இம்சை வழியல்ல; அகிம்சை வழியையே கடைப்பிடிக்க விரும்புகிறோம்; அடக்குமுறை யல்ல; அரசியல் தீர்வின் மூலமே நாம் பிரச்சனைக்கு தீர்வு காண விரும்புகிறோம், என்று முழக்கமிடுவதால் மட்டும் தனது அரசின் வெறிச் செயல்களுக்கு திரை போடப்பார்க் கிறார் மந்திரி லலித்.

புத்த தர்மம் பற்றியும்—தார்மீகம் பற்றியும் பேசுவதால் தங்களை நியாயப் படுத்திக் கொள்ளலாம் என நினைத்து பகற்கனவு கண்டு கொண்டிருக்கிறது இவ் இனவெறி அரசு. சர்வதேச பயங்கரவாதிகளுடனான இனவெறி அரசின் உறவுகள் வெளிப்படையாகி விட்டன. தமிழ் பேசும் மக் களின் விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்க முனைந்து, பயங்கரவாதிகள் ஒழிப்பு என்ற போர்வைக்குள் அப்பாவித் தமிழ் மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஊறு விளைவித்து, பொருளாதார நெருக்கடி களால் பொறிந்து கொட்டுப்படப்போகும் தனது அரசை காப்பாற்றிக் கொள்ள பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது ஸ்ரீலங்கா அரசு. தமிழ் பேசும் மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போவதால் தமிழினத்தையே அழித்து ஒழித்து விடுவதற்கு கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகின்றது இவ் இனவெறி அரசு.

இப்போக்கில் முழுமையாக செயல்ப்பட்டுக் கொண்டு வரும் இனவெறி அரசு, தமிழ்ப் பகுதிகளிலிருந்து தமிழ் பேசும் மக்களை விரட்டி அகதிகளாக்கிவிட்டு, அவ்விடங் களில் சிங்கள மக்களை குடியமர்த்துவதிலும் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை என்று பிரச்சாரத்தை மேற்கொண்டு அவர்களை ஆயுதபாணியாக்குவதிலும்—அவ் விடங்களில் இரா.ணுவ முகாம்கள் அமைப்பதிலும் தீவிர முயற்சி எடுத்து செயல்பட்டு வருகின்றது.

மேலும், சர்வதேச பயங்கரவாதிகளின் உறவினால் மமதை கொண்டுள்ள இச் ஸ்ரீலங்கா அரச பயங்கரவாதிகள், அண்டை நாடான இந்திய தமிழ் மக்கள் மேலும் தமது அராஜக வேலைகளை பிரயோகித்துக் கொண்டிருக்கின் றனர். இவ் அரச பயங்கரவாதிகளின் வன்முறையால் இலங்கை கரையோரங்களில் மட்டுமல்ல பிணங்கள் மிதக் கின்றன, இந்தியக் கரையோரங்களிலும் கூடவே பிணங்கள் மிதக்கின்றன.

இன்று இந்திய தமிழ் மீனவர்களின் பாதுகாப்புக்கு, ஏன்? இந்தியாவின் பாதுகாப்புக்கும் தமிழ் ஈழம் அமைவது தவிர்க்க முடியாததொன்றாகி விட்டது. இத் தவிர்க்க முடி யாத விளைவான தமிழ் ஈழமே தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கும், இனவாதத்தில் சிக்குண்டு மயங்கி இருக்கும் சிங்கள மக்களின் விடுதலைக்கும் வழிவகுக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

# மௌன அதிர்வுகள்

-ஜென் ஸாஜி



அவர்களது கேள்விகளுக்கு
எனது மௌனங்கள் நீள்கையில்
பிரதியுபகாரமாய்
உதடுகள் வெடிக்கும்,
நாள் மாறி, நாள் மாறி,
முகமும் சிதையும்;
எனினும் என்னில்
மௌனமே ஆட்சி செய்யும்
இருளின் குடைவிரிப்பில்
இரத்தத்தின் நாற்றத்தில்
ஈனஸ்வரமே
இச்சிறையில் குடியிருக்கும்,
எனினும் என்மனது பாடும்
போர்ப்பாடல் வரிகளை;

'எமது கண்ணின் சிவப்பு-அது
எதிரியை எரிக்கும் நெருப்பு
போராட்டமே வாழ்வு-இனி
எமக்கில்லைத் தாழ்வு'

எந்தப் பூட்ஸ் மிருகம் இதைத்தடுக்கும்?
புரையோடிய புண்களும்,
ஒரு வருட நீட்சியாய்
சிநேகித்துக்கொண்ட
கை விலங்கும்
இன்னும் நீண்டுகொண்டே போகும்
என் மக்கள் மீதான
கொலைச் செயலின் சாரமாய்
அவர்களது சன்மானமும்
எனது இலட்சியத்தின் முன்
எம் மாத் திரம் ? ?..........
இறுதியே இச் சிறைதானெனினும்
எமது இலட்சியம்
தோழர்களால் நிஜமாய் மலர்கையில்
மௌனம் அதிரும்
மனது பாடும்.

## மக்கள் விரோத ....

( 1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் துன்பங்களை புரிந்து கொள்ளாது — மேலாவித்தனமான விளை யாட்டுக்களிலேயே நாட்டம் கொண்டுள்ளனர்.

அனைத்து மக்களையும் வென்றெடுக்க வேண்டிய இவ்வேளையில், இவர்களின் இச் செயல்களால் ஏனைய புரட்சி கர இயக்கங்கள் மேல், சர்வதேச ரீதியாக மக்கள் மத்தியில் தவறான கண் ணோட்டம் ஏற்படுத்துவ தற்கே வழி வகுக்கும் இவற்றைச் செய்தவர்கள் விடுதலைக்காக போராடுப வர்கள் தானா? அல்லது கொள்ளைக் கோஷ்டிகளா? என்றே கேட்கத் தோன்று கிறது. இச் செயல்கள் ஸ்ரீ லங்கா இராணுவத்தின் செயல்களுக்கு ஒப்பான வையே.

தற்சமயம் தமிழ் ஈழத்தில் சமூக விரோத செயல்கள் அதி கரித்துள்ளன. சில இயக்கங் கள் தான் தோன்றித்தனமாக பொறுப்பற்ற தன்மையில் தமிழ் மக்களின் உடமையி லேயே கை வைக்கின்றனர். அண்மையில் இரு வர்த்தகர் களை பணயம் வைக்கும் அளவுக்கும் — தனியார் நிறு வனங்களில் கொள்ளை யடிக்கும் அளவுக்கும் இது வளர்ந்துள்ளது.

கடத்தப்பட்டவர்கள் அல்லது கொள்ளையடிக்கும் தனியார் நிறுவனங்களின் உரிமை யாளர்கள் விடுதலையில் அக்கறை அற்றவர்கள், ஏழை மக்களை சுரண்டி கொள்ளை லாபம் அடிப்பவர்கள் என இச்செயல்களை செய்தவர்கள் நியாயம் கற்பிக்கலாம். இவற்றிற்கெல்லாம் முடிவு சுரண்டல் சமுதாயத்தை மாற்றி சுரண்டலற்ற சமுதா யத்தை அமைப்பதே. சில தனிநபர் மேல் பழி நட வடிக்கைகள் அல்ல.

இன்றைய நெருக்கடி நிலையில் தமிழ் மக்களை அணி திரட்டி ஸ்தாபனமயப் படுத்தி மக்கள் ஆயுதப் போராட்டத்திற்கு தயார் செய்வது இயக்கங்களின் இன்றைய உடனடி கடமை யாகும்.

தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் அனைத்து வர்க்கங்களின் ஆதரவையும் பெற்றே ஆக வேண்டிய தவிர்க்க முடியாத நிலையே இருந்து வருகிறது. தேசிய விடுதலைப் போராட் டத்தின் தன்மையை புரிந்து கொள்ளாத சித்தாந்தக் குழப் பவாதிகளால் மேற்கொள்ளப் பட்ட யாழ்நகரில் இரு வர்த் தகர்கள் கடத்தப்பட்ட சம்பவ மும் அதன் பின் யாழ்நகர் கடையடைப்பு சம்பவம் தமிழ் ஈழ விடுதலையை பல ஆண்டுகள் பின் தள்ளி விடுமோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

பெருந் தேசிய இனவாதத் தால் ஒடுக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முதலாளிகளும், குட்டி முத லாளிகளும் முன்னிற்பது இயல்பே.

ஆனால் சமுதாய மாற் றத்தை பாட்டாளி வர்க்க சர் வாதிகாரம் வரை எடுத்துச் செல்லும் புத்திஜீவிகள் தலைமையில் பாட்டாளி வர்க்கம் போராட்டத்தை முன்னெடுக்கும் போது தான் மக்கள் பூரண விடுதலை அடைவார்கள் என்பது யதார்த்தமாகும்.

தமிழ் ஈழ தேசிய விடு தலைப் போராட்டத்தில் முரட்டுத் தனமான அராஜக நடவடிக்கைகள் தமிழ் மக்க ளிலேயே பல எதிர்ப் புரட்சி யாளர்களை தோற்றுவிப்ப தற்கே வழி வகுக்கும். இத் தகைய படு பிற்போக்கான செயல்களை தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வன்மை யாக கண்டிக்கிறது. இச் செயல்கள் தொடருமானால் மக்களின் ஆதரவுடன் இச் செயல்களை ஒடுக்குவதற்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தயங்காது.

## ரீகனின் ஆணவப் பேச்சு

உலக சமாதானம், அணு ஆயுத ஒழிப்பு என்று கூக்குரல் போடும் அமெரிக்க ஜனாதிபதி ரீகன், அணு ஆயுதங்களை ஒழிப்பது என்று சோவியத் யூனியனுடன் (யூ.எஸ்.எஸ்.ஆர்) ஒப்பந்தம் ஏற்பட்டாலும் விண்வெளியில் தற்காப்பு ஆயுத கோள்களை பறக்கவிடும் திட்டத்தை கைவிடப் போவதில்லை என்று கூறினர்.

www.padippakam.com



# வாரத்தில் இரு தடவைகள் நேட்டோ ஆயுதங்கள்

# ஸ்ரீலங்காவில் குவிகின்றன.

இந்து மகா சமுத்திர பிராந்திய நாடுகளை தொடர்ந்து சுரண்டி தமது வாழ்வை வலுப்படுத்தவும் — இந்தியாவை பணியவைத்து சுரண்டுவதற்கும் — இலங்கையில் பொருளாதாரத்திலும், அரசியலிலும் மேலாதிக்கம் பெற்றுவிட்ட நிலையை தொடர்ந்து நிலை நிறுத்தவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இன்று தனது இராணுவ தளத்தை அமைப்பது தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இவ் எண்ணம் நிறைவேற தமிழ் ஈழப் போராட்டம் மிகப்பெரும் தடைக்கல்லாக உள்ளது. இதனால் தமிழ் ஈழப் போராட்டத்தை அடக்கக்கூடிய உதவிகளை ஸ்ரீலங்கா தரகு — முதலாளித்துவ அரசுக்கு மறைமுகமாக செய்து வந்தது அமெரிக்க ஏகாதிபத்தியம். மறுபுறம் இலங்கை தமிழ் பேசும் மக்கள் மீதான ஸ்ரீலங்கா இராணுவத்தின் வெறிச்செயலை பகிரங்கமாக கண்டித்தும் வந்தது. ஆனால் இன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முகமூடிகள் கிழித்தெறியப்பட்டு, ஸ்ரீலங்கா நிலப்பிரபுத்துவ — சோவனிஸ அரசுக்கு அமெரிக்க ஆயுதங்கள் குவிவது அம்பலமாகியுள்ளது.

கடந்த 10.02.1985ல் கொழும்பு சென்றடைந்த ஜைரோ ஏர்வேஸ் சரக்கு விமானத்தில் 15,000 கிலோ. கிராம் எடையுள்ள ஆயுதங்கள் சென்றதும் — அவ்விமானம் திருவநந்தபுரத்தில் இறக்கப்பட்டு எரிபொருள் நிரப்பப்பட்டு சென்றதும் யாவரும் அறிந்ததே. ஆனல் திருவநந்தபுரத்தில் விமானம் இறக்கப்பட்டது வழி தவறியமையாலேயே என்று கூறப்பட்டது. அதாவது, ஸ்ரீலங்காவுக்கு இதுவே முதல் தடவையாக ஆயுதம் செல்வது போல நடித்துக் காண்பிக்கப்பட்டது. ஆனல் இவர்களின் இப்பொய்ப் பிரச்சாரங்கள் அனைத்தும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இதுபோல ஆயுதங்கள் கடந்த பல . மாதங்களாக ஸ்ரீலங்காவில் குவிந்து கொண்டிருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. 1984—ம் ஆண்டு இறுதியில் ஸ்ரீலங்காவின் மேன்மை தங்கிய சனுதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இராணுவ உதவி கேட்டு அமெரிக்கா சென்றிருந்தார். இலங்கை மீதான இந்தியப் படையெடுப்பை காரணம் காட்டி ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆயுத உதவி கேட்டிருந்தார். அமெரிக்க ஏகாதிபத்தியமும் தனது தேவைகள் கருதி இலங்கையின் இராணுவத் தேவைகள் என்ன என்று ஆய்வு செய்யும்படி அமெரிக்க பாதுகாப்பு கவுன்சிலுக்கு உத்தரவிடப்பட்டது. அமெரிக்க பாதுகாப்பு கவுன்சிலானது தனது ஆய்வினை முடித்த பின்னர் நேட்டோ ஒப்பந்த அமைப்பின் (அமெரிக்க இராணுவ கூட்டாளிகளின் அமைப்பு) அமெரிக்க கமாண்டர் ஜெனரல் ரோஜர்ஸ் என்பவருக்கு இலங்கையின் இராணுவ தேவைகளுக்கு உதவும்படி அமெரிக்க நிர்வாகம கட்டளையிட்டது.

இவ் உத்தரவை தொடர்ந்து போர்ச்சுக்கல்லில் இருந்து ஆயுதங்கள் விமானங்கள் மூலம் இலங்கையில் குவியத் தொடங்கின. வாரத்திற்கு இருமுறை இவ் ஜைரே ஏர்வேஸ் சரக்கு விமானத்தில் ஆயுதங்கள் இலங்கை வந்த வண்ணமே இருந்தன. போர்ச்சுக்கல் நேட்டோ நாடுகளின் ஆயுதக்கிடங்காக விளங்குகிறது. விமான ஓட்டிகளையும் நேட்டோவே ஏற்பாடு செய்கிறது. இவ்விமானம் ஆனது வாரத்திற்கு இருமுறை போர்ச்சுக்கல்லில் இருந்து புறப்பட்டு இஸ்ரேல் — எகிப்து — ஜோர்டன் — சவூதி அரேபியா — மஸ்கட் ஆகிய நாடுகளின் தலைநகர் வழியாக கொழும்பு வந்தடைகிறது.


கடந்த 09.02.1985ல் திருவநந்தபுரத்திற்கு வந்த ஜைரே ஏர் வேஸ் சரக்கு விமானமான டிசி—8 விமானத்தை ஒட்டிவந்த டாட்ரீக்— உட்ஸ் ஆகிய இருவரும் 12 தடவைகள் இராணுவ ஆயுதங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். அவ்வளவு அனுபவமுள்ள இவ்விமான ஓட்டிகள் திருவநந்தபுரத்தில் விமானத்தை இறக்க வேண்டிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டது?

டிசி—8 விமானம் 08.02.1985ல் போர்ச்சுக்கல்லில் இருந்து 15,000 கிலோ. கிராம் எடையுள்ள இராணுவ சாதனங்களே ஏற்றப்படும். ஆனால் இம்முறை 2,000 கிலோ.கிராம் எடையுள்ள இராணுவ சாதனங்கள் கூடுதலாக ஏற்றப்பட்டதால் விமானத்தில் நிரப்பப்பட்ட எரிபொருள் வழக்கமாக செலவழியும் நேரத்தை விட அதிவேகமாக செலவழிந்துவிட்டது. இதனால் விமானத்தை அரபிக்கடல் பகுதியில் மூழ்கடிக்க வேண்டும் அல்லது திருவநந்தபுரத்தில் இறக்க வேண்டிய நிலைக்கு விமான ஓட்டிகள் தள்ளப்பட்டனர். இதனாலேயே, விமானம் திருவநந்தபுரத்தில் தரை இறங்க வேண்டிய நிலைக்குள்ளானது. மாறாக, வழிதடுமாறி இறங்கவோ, ஏறவோ இல்லை.

டிசி—8 விமானத்தின் எரிபொருள் விரைவாக தீருவதை முன்கூட்டியே விமான ஓட்டிகள் உணர்ந்திருந்ததால் விமானத்தை பாகிஸ்தானின் கராச்சியில் இறக்க எரிபொருள் நிரப்பியிருக்கலாம். இதனால், தவிர்க்க முடியாதபடியே திருவநந்தபுரத்தில் விமானம் தரை இறங்கியது.

இவற்றோடு வானொலி நிலையம் (வோய்ஸ் ஒவ் அமெரிக்கா) என்ற பெயரில் உளவு மாளிகையை அமைக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது அதிகாரிகளை கொழும்பிற்கு அனுப்பியுள்ளது. அமெரிக்காவின் தகவல் ஒலிபரப்பு ஏஜன்சி டைரக்டர் "சார்லஸ்சாக்" தனது நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளுடன் கடந்த 04.03.1985ல் கொழும்பு வந்து சேர்ந்தார். சனாதிபதி ஜெ.ஆர். ஜயவர்த்தனா — மந்திரி ஆனந்த திஸ்ஸடி அவ்விஸ் ஆகியோரை சார்லஸ்சாக் சந்தித்தார்.

இப்படியாக, அமெரிக்க ஏகாதிபத்தியம் தமிழ் ஈழப் போராட்டத்தை அடக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவும் நேரடியாக இராணுவ உதவிகள் வழங்குவதும் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துள்ளது.




இலங்கைக்குக் கொலைக் கருவிகள் ஏற்றிவந்தவிமானம் - திருவனந்தபுரத்தில் தரித்திருந்தபோது

## சேர்னங்கோவின் மறைவுக்கு....

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

இந்நிலையில் யுத்த அபாயத்தில் இருந்து மனிதகுலத்தை காப்பாற்றுவது சோஷலிஸ நாடுகளினதும் — முற்போக்கு அரசுகளினது பெரும் கடமையாக இருக்கிறது. கடந்த உலக மகா யுத்தங்களில் இருந்து மனித குலத்தை காப்பாற்றியதிலும்—மூன்றாம் உலக மகா யுத்தம் நிகழாமல் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புரட்சியாளர்களுக்கு முட்டுக்கட்டை போட்டதிலும் சோவியத் யூனியன் பெரும் பங்கு வகிக்கிறது. தோழர்கள் லெனின், ஸ்டாலின், பிரஸ்நேவ், ஆந்திரபோவ் வரிசையில் தோழர் செர்னங்கோவும் மிகத் திறமையாக உலக மக்களுக்கு பணியாற்றியுள்ளார்.

ஜெனிவா ஆயுத குறைப்பு பேச்சு வார்த்தையிலும்—விண்வெளியில் அமெரிக்கா ஏவுகணை நிறுத்த முற்படுகையிலும் உலக மக்களை உலக யுத்தத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் மிகவும் புத்திசாதுரியமாக பேச்சு வார்த்தைகளை நடாத்தினார். இந்துமகா, சமுத்திர பிராந்தியத்தை அமைதி மண்டலம் ஆக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவுக்கு உறுதுணையாக செயல்பட்டதில் செர்னங்கோவின் பங்கு மகத்தானது. அமெரிக்க ஏகாதிபத்திய மானது பாகிஸ்தான் அடிவருடிகளினூடாக இந்தியாவை ஆக்கிரமிக்க முற்படும் போதெல்லாம் இந்தியாவுக்கு ஆபத்து நிகழுமேயானால் சோவியத் யூனியன் இந்தியாவுக்கு உதவி அளிக்க முன்வரும் என குரல் எழுப்பியதன் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சவாலாகவே செயல்பட்டுள்ளார். 1984.09.09ல் தோழர் ஆந்திரபோவ் காலமானதைத் தொடர்ந்து பதவிக்கு வந்த இவர் தனது பதவிக்காலத்தில் உலக யுத்தம் நிகழாமல் நிறுத்திய பெருமை இவரையே சாரும்.

இவரது இழப்பை இட்டு தமிழ் ஈழ மக்கள் தமது ஆழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறார்கள். இவரது இழப்பை புதிய அதிபர் கோர்பச்சேவ் ஈடுசெய்வாரென உலக ஒடுக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

> குறிப்பிட்ட அரசின் எல்லைகளுக்குள் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களைப் பலவந்தமாக வைத்துக் கொண்டிருப்பதை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்தினர் போராட வேண்டும். அவர்கள் சுய நிர்ணய உரிமைக்காகப் போராட வேண்டும்.
>
> தோழர் லெனின்

## அமெரிக்காவின் முதலைக் கண்ணீர்

சர்வதேச ரீதியாக உலக பரந்துபட்ட மக்கள் தமிழ் ஈழ போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பது பெருகி வரும் வேளையில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக அடக்குமுறைக் கொடுமைகளை மேற்கொண்டு வரும் சிறீலங்கா சோவனிஸ அரசுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் பரிபூரண ஆதரவு நல்கி வருவது யாவரும் அறிந்ததே.

இதை அமெரிக்க மக்களுக்கு மூடிமறைக்க அமெரிக்க வெளிநாட்டு இலாகா உயர் அதிகாரி ராபர்ட் பெக் தமிழ் மக்களை சிறீலங்கா இராணுவம் கொன்றொழிப்பதற்கு அனுதாபம் தெரிவித்தார். தமிழ் மக்கள் அதிகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்களின் குடியேற்றத்தை தடுக்க வேண்டும் என்றும் ராபர்ட் பெக் கோரிக்கை விட்டார். இவரின் வாய்ச் சவடல்களை அமெரிக்கா ஒடுக்கப்பட்ட மற்றும் தொழிலாள வர்க்கம் புரிந்து கொள்ளும்.

www.padippakam.com



# சிறீலங்கா வதைமுகாம்களில் தமிழ் இளைஞர்கள்

ஶ்ரீலங்கா பேரினவாத அரசின் சிறைச்சாலைகள் பற்றி பேசாத நாடே இல்லை. கொடூரவதை முகாம்களாக மாறியுள்ள சிறைச்சாலைகள் பற்றி அறியாதோர் யாரும் இல்லை எனலாம். அதிலும் வெலிக்கடை சிறைச்சாலை மிகவும் முக்கியமானதொன்றாகும்.

1983 ஜூலை 24, 25ம் திகதிகளில் இனவெறியர்கள் வெலிக்கடை சிறைச்சாலையில் நடத்திய கோர விளையாட்டுகள் தமிழ் பேசும் மக்கள் மனதைவிட்டு என்றுமே நீங்காது. அன்று தமிழ் ஈழ தேச பிதா தங்கத்துரை தளபதி குட்டிமணி மற்றும் முன்னணிப் போராளிகளான தோழர் ஜெகன் — தோழர் தேவன் - தோழர் நடேசுதாசன் தோழர் சிவபாதம் — தோழர் சிறிகுமார் — மற்றும் 52 விடுதலைப்போராளிகளை கத்தி — கட்டை — அலவாங்கு — மண்வெட்டி சகிதம் சென்று துடிக்கத் துடிக்க கொலை செய்து புத்தபிரானுக்கு இரத்தாபிஷேகம் செய்தது உலகம் அறிந்த உண்மை.

அன்று நடாத்திய கொடுமைகளின் கொடூரம் இன்றும் குறைந்து விடவில்லை.

தொடர்ந்து பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு ஶ்ரீலங்கா அரச பயங்கரவாதிகளால் கைது செய்யப்படும் அப்பாவித் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் இக்கொடூர சிறைச்சாலைகளை நிரப்பிக் கொண்டிருக்கின்றனர்.

தங்கள் வாழ்க்கை புஸ்வாணமாகிப் போன நிலையில் இக்கொடூர சிறைச்சாலைகளில் தமிழ் இளைஞர்கள் உணவு — உடை — இருப்பிட வசதி ஏதுமற்று கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது மட்டுமல்ல காவிக்கு அருகாமையிலுள்ள ஹிட்லர் பாணி வதை முகாமான, பூசா முகாமில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் நூற்றுக் கணக்காக வைக்கப்பட்டுள்ளார்கள். இங்கு இவர்களும் நாளும் சித்திரவதைகளை தான் கண்டது மிச்சம். அடிக்கடி தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது. சித்திரவதைகளின் தாக்கத்தை தாக்குப் பிடிக்க முடியாது சில இளைஞர்கள் உயிர் நீத்துவிட்டால், அவர்கள் முகாமை விட்டு தப்புவதற்கு முயற்சி செய்தார்கள் என்ற முத்திரையை குத்தி தங்களை நியாயப்படுத்தி விடுவர், ஶ்ரீலங்கா அரச பயங்கரவாதிகள்.

மேலும் அவ் முகாமில், உணவு மிகவும் குறைந்தளவே கிடைக்கின்றன. அதிகமான நாட்களில அதுவும் கிடைக்காமல் போய்விடும். குறிக்கப்பட்ட அளவு தண்ணீர் தான் ஒரு நாளைக்கு வழங்கப்படும். அத்தண்ணீரைத்தான் கைதிகள் ஒரு நாள் பாவனைக்கு பயன்படுத்த வேண்டும். அத்தண்ணீரோ குடிக்க மட்டும் காணுமோ என்பதே சந்தேகம்.

இந்நிலையில் நாளும் அடி, உதை வாங்கிக் கொண்டு, தவித்துக் கொண்டு என்று தமிழ் ஈழ விடுதலை நிதர்சனப்படும் தங்கள் விடிவுக்கு வழி தான் எப்போது? நடக்கும் என்று எண்ணிக் கொண்டு நடைப் பிணங்கள் போல வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் தமிழ் இளைஞர்கள்.

இப்படியாக, தமிழ் இளைஞர்களை வதைத்துக் கொண்டு சிறைகளில் இடமில்லாத நிலையிலும் மேலும், மேலும் கைது செய்வதை மட்டும் நிறுத்தவில்லை.

அடிக்கடி பல இராணுவ டாங்குகள் — கவசவாகனங்கள் — ட்ரக்குகள் என்பனவற்றில் நவீன ஆயுதங்களுடன், 500க்கு மேற்பட்ட இராணுவ வெறியர்கள் ஒரு கிராமத்தை சுற்றி வளைப்பர். பின்னர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கிராமத்தை வைத்துக் கொண்டு அங்குள்ள தமிழ் இளைஞர்கள் — யுவதிகள் எல்லோரையும் கைது செய்வர். கைது செய்யப்பட்டவர்கள் பெற்றோர்களின் முன்னாலேயே அவ்விடத்தில் இம்சைக்குட்படுத்தப்படுவர். இதுதான் தமிழ் ஈழத்தில் நடக்கும் நாளாந்த நிகழ்ச்சிகள் ஆகும்.

நாளாந்தக் கைதின் எதிரொலியாக, சிறைச்சாலைகளில் 21 பேர் தங்கக்கூடிய சிறை அறைகளில் 50க்கு மேற்பட்டோர் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இதனால் அங்கு அவர்கள் மூச்சு விடக்கூட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். காற்றோட்ட வசதியற்ற அவ் அறையில் பலர் அடைக்கப்படுவதன் காரணமாகவும், 50 பேருக்கு ஒரு கழிவறை தான் ஒதுக்கப்பட்டிருப்பதாலும் வைத்திய கவனிப்பு அற்று நிலையில் தொற்று நோய்கள் பரவக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

இதைப்பற்றி, இலங்கை சிறை அதிகாரி ஒருவர் கூறிய போது — இலங்கையின் சிறைகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி மிகவும் மோசமான, சுகாதார கேடுகளை விளைவிக்கக்கூடிய நிலையை உண்டு பண்ணியுள்ளது. கைதிகள் நின்று கொண்டிருக்கக்கூடிய அளவுக்குத்தான் அறைகள் இருக்கின்றன. கைதிகள் தூங்குவது இங்கே நடக்கக் கூடியதல்ல. நின்று கொண்டே தான் தூங்க வேண்டும். இந்த அவல நிலையை போக்க இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று உண்மை நிலையை கூறியுள்ளார்.

இப்படியாக, நாளாந்தம் அரச பயங்கரவாதிகளின் இனவெறிக்கு இலக்காகிக் கொண்டுவரும் தமிழ் பேசும் மக்களின் இன்னல்களின் தீர்வுக்கு •தமிழ் ஈழம் அமைவது ஒன்றே முடிந்த தீர்ப்பாகும்.

இம்முடிந்த தீர்வுக்கு மக்கள் ஆயுதப் போராட்டத்தின் மூலமே இறுதி வெற்றியை பெறமுடியும்.

## எழுச்சி

ஆண்டுச் சந்தா 25/—

தமிழ் பேசும் மக்களின் நிலையையும், அனைத்து ஒடுக்கப்படும் மக்களின் நிலையையும், தமிழ் ஈழ போராட்டத்தை வலுப்படுத்தும் வகையிலும், தமிழ் ஈழப்போராட்டத்தை பின்னோக்கி நகர்த்த முயலும் பிற்போக்கு சக்திகளை மக்களுக்கு இனங்காட்டிக் கொள்ளும் வகையிலும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தனது உத்தியோக பூர்வ ஏடாக "எழுச்சி"யை வெளியிட்டு வருகின்றது

இப் பத்திரிகைக்கு முற்போக்கான ஆக்கங்கள், கவிதைகள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது. ஆக்கங்கள், கவிதைகள் திருத்தும் உரிமை பத்திரிகைக் குழுவினர்களுக்கு உண்டு.


(தொடர்புகட்கு)

நிர்வாகி
பத்திரிகைக்குழு

இரா. தமிழ்ச் செல்வன்
35/3 வெல்கம் காலனி
அண்ணாநகர் மேற்கு
சென்னை — 600 040



இராமேஸ்வரக் கடற்கரையில் தமிழ் ஈழ மக்கள் அகதிகளாக வந்திறங்கும் அவல நிலை.




காப்டன் பவான் மறைந்து, ஓராண்டு நிறைவையொட்டி, நாடெங்கும் ஒட்டப்பட்ட சுவரொட்டி.

### ஆதரவாளர்களுக்கு நன்றி

மக்களின் விடுதலையில் — தமிழ் ஈழ விடுதலையில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள மக்களின் உதவி கரங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் மேலும் ஊக்கம் அளித்துக் கொண்டிருக்கிறது. ஆதரவாளர்களின் தாராள பண உதவியினுல் தமிழ் ஈழ விடுதலை போராட்ட தயாரிப்பை ஒழுங்கமைக்க கூடியதாக இருக்கிறது. இவ் ஆதரவாளர்களின் உதவிக்கு தமிழ் ஈழ மக்கள் சார்பில் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# பொருளாதாரப் பொறிவும், யுத்தத் தயாரிப்புக்களும்.

பூகோள ரீதியாக ஏகாதிபத்திய, முதலாளித்துவ உற்பத்தி முறையானது உள் முரண்பாடுகளால் இயங்க மறுத்து தடம் புரண்டு கொண்டு செல்கின்றது. ஆங்காங்கே ஏகாதிபத்திய, முதலாளித்துவ புரட்டர்களும் — ஆட்சியாளர்களும் — விற்பனர்களும் நாட் கணக்கில் பேசியும் இவ் முரண்பாடுகளை தீர்க்க முடியாதது மட்டுமல்ல — இவ் முரண்பாடுகளை தற்காலிகமாவது தாக்குப் பிடிக்க முடியாமல் திணறடிக்கிறார்கள்.

சர்வதேச ரீதியாக பெருகி வரும் வேலையில்லாத திண்டாட்டம் — விலைவாசி ஏற்றம் — வீட்டு வசதியின்மை — ஊட்டச் சத்து இன்மை — நோய் முதலியவற்றிற்கு இவ் ஏகாதிபத்திய, முதலாளித்துவ வாதிகளால் ஒரு எல்லைக் கோட்டையாவது காட்ட முடியாதிருக்கிறது.

இவற்றை தீர்க்க திறனற்றவர்கள் தமது ஆட்சியை தொடர்ந்து நிலை நிறுத்த ஒரேவழி மூன்றும் உலக மகாயுத்த தயாரிப்பபே என தீர்மானித்து விட்டதையே உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்திய, முதலாளித்துவ வாதிகளின் இன்றைய நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

### ஏகாதிபத்தியத்தின் இயலாமை

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஊதுகுழல்கள் — ஆட்சி செலுத்தும் இடமெல்லாம், அவர்களின் ஆட்சிக்கு ஒரே நெருக்குவாரங்கள். ''பாவியார் போகும் இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்'' என்பது போல இந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் செல்லும் இடமெல்லாம் இடறியே வீழ்கிறது.

ஏற்கனவே லத்தீன் அமெரிக்க நாடுகளில் தான் கொண்டு வந்த மில்டறி அரசாங்கங்களை காப்பாற்ற சக்தியற்று நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் எல்சல்வடோர் .. பிரேசில்.. அர்ஜென்டீனா.. இந்தோனேசியா.. பாகிஸ்தான்.. பங்களாதேஷ் உடன் கூடவே இலங்கைக்கும் அரசியல் — சமூக பொருளாதார நெருக்கடிகளை ஏற்றுமதி செய்து, தான் தப்புவதற்கு எடுத்த பகீரதப் பிரயத்தனங்கள் பலிக்காது போகவே ஒரு மூன்றும் உலக மகா யுத்தத்திற்கான தயாரிப்பை செய்வதை தவிர வேறு வழியில்லாமல் திணறடிக்கிறது.

எல்சல்வடோர் தொடக்கம் இலங்கை ஈறான் அமெரிக்க ஏகாதிபத்தியம் மேலும் பல வியத்நாம்களை சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலைகளை சமாளிக்கவும் — உலகளாவிய ரீதியிலான ஏகாதிபத்திய எதிர்ப்பு அலையை சமாளிக்கவுமே இவ் ஏகாதிபத்திய, முதலாளித்துவ வாதிகளின் ஒரு மூன்றும் உலக மகாயுத்த தயாரிப்புக்கள். மூன்றும் உலக மகா யுத்த தயாரிப்பின் முதல் படியே அமெரிக்க ஏகாதிபத்தியம், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏவுகணைகளை குவிப்பதும் — வானவெளியில் ஆயுதங்களை குவிப்பதற்காக நடைபெறும் ஆய்வுகளும்.

### எதிர்ப்புரட்சியாளருக்கு நிதி வழங்கும் ஏகாதிபத்தியம்

இதற்காகவே, அமெரிக்க ஏகாதிபத்தியம் சென்ற ஆண்டைவிட இம்முறை (1985) வரவு — செலவு திட்டத்தில், கூடுதலாக 3000 கோடி. டொலரை பாதுகாப்பு செலவுகளுக்கு ஒதுக்கியுள்ளனர். இந்நிலையால், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் 1985 வரவு — செலவு திட்டத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு துண்டு விழும் தொகை 18,000 கோடி. டொலரை எட்டியுள்ளது. உலக மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில் — குறிப்பாக ஆப்பிரிக்க நாட்டு மக்கள் கடும் பஞ்சத்துள் அகப்பட்டிருக்கும் இவ்வேளையில், 1985 பட்ஜட்டில் வெளிநாட்டு உதவிக்கு 1500 கோடி. டொலரை ஒதுக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம் வெளிநாட்டு இராணுவ உதவிக்கு 900 கோடி. டொலரை ஒதுக்கியுள்ளனர். மிகுதிப்பணமும் எதிர்ப் புரட்சியாளர்களுக்கே குறிப்பாக ஆப்கானிஸ்தான் — நிக்கரகுவா — ஃகியூபா போன்ற ஜனநாயக அரசுகளை எதிக்கும் எதிர்ப்புரட்சி கும்பல்களுக்கே செலவிடப்படும். இப்படியாக, வெளிநாட்டு உதவிகள் முழுவதும் இராணுவ துறைக்கே செலவிடப்படுகின்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரிஷிங்—2, சூருஸ் போன்ற ஏவுகணை வகைகளை குவித்துள்ளது அமெரிக்க ஏகாதிபத்தியம். பிரிட்டன் — பிரான்ஸ் — மேற்கு ஜெர்மனி போன்ற மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளில் மட்டும் 572க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை சோவியத் யூனியனுக்கு (யூ.எஸ்.எஸ்.ஆர்) எதிராக நிறுத்தியுள்ளது.

### விண்வெளியில் ஆயுதக் குவிப்பு

மூன்றும் உலக மகாயுத்தத் தயாரிப்பிற்கு தரையில் குவிக்கும் ஆயுதங்கள் போதாதென்று தற்போது வானவெளியிலும் அதி நவீன ஆயுதங்களை குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். கடந்த ஜனவரி மாதத்தில் சோவியத் யூனியனின் தகவல் தொடர்புகளை இரகசியமாக வேவு பார்க்கும் உளவு துணைக் கோள்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் விண்வெளியில் செலுத்தியது.

கடந்த ஜனவரி 25—ல் அமெரிக்க விண்வெளி ஓடம் 'டிஸ்கவரி'' ரகசியமாக தயார் நிலையில் வைக்கப்பட்டு திடீரென்று விண்வெளியில் ஏவப்பட்டது. இதில் சென்ற 5 விண்வெளி வீரர்களும் இராணுவ அதிகாரிகளாவார்கள்.

இவர்கள் சோவியத் யூனியனை (யூ.எஸ்.எஸ்.ஆர்) வேவு பார்க்கும் செயற்கை கோளை விண்வெளியில் செலுத்தினார்கள். இவ் விண்வெளி செயற்கைக் கோளானது — சோவியத் யூனியன் ஏவுகணை சோதனைகளை கண்டறிந்து தகவல் அனுப்பும். ஐரோப்பா — ஆசியா — ஆப்பிரிக்கா பெரும் பகுதிகளில் ராணுவ மற்றும் ராஜீய தொடர்புகளையும் அது கண்காணிக்கும்.

5 கோடி. டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட ராக்கெட் அந்த துணைக் கோளை விண்வெளி ஓடத்திலிருந்து 39,999 கி.மீ. உயரத்திலிருந்து வேவு பார்க்கும் நிலைக்கு செலுத்தியது. செலுத்தப்பட்ட இவ் செயற்கைக்கோள் 30 கோடி. டொலர் செலவில் உருவாக்கப்பட்டது.

செலுத்தப்பட்ட விண்வெளி ஓடமானது (டிஸ்கவரி) மூன்று நாட்கள் ரகசிய பணியை மேற்கொண்ட பின்னர் (ஜனவரி 28ல்) பூமிக்கு திரும்பியது.

### மின்னியல் செயற்கைக் கோளின் தயாரிப்பு

இதுவும் போதாதென்று அமெரிக்க ஏகாதிபத்தியம் அதி நவீன தன்மை. கொண்ட ''மின்னியல் செயற்கை கோள்களையும்'' தயாரித்து விண்வெளியில் செலுத்தப் போகிறதாம்.

இம் மின்னியல் செயற்கைக் கோள்கள் ராணுவ கேந்திர தளங்களை படம் பிடித்துவிடக் கூடியவை. யூனிபோம் அணிந்த வீரர்கள் — சாதாரண உடையில் உள்ள மக்கள் என்று துல்லியமாக காட்டக்கூடிய திறன் வாய்ந்தவை. மேகமூட்டம் — இருள் அனைத்தையும் கடந்து வந்து செயற்படும் சூட்சுமம் — கொண்டவை. தொலைபேசி சம்பாஷணைகளை கேட்டு பதிவு செய்யக் கூடியவை. இராணுவ ரேடியோ செய்திகள் ஏவுகணை சோதனை சமிஞ்கைகள் இவைகளே கூட பதிவு செய்யக் கூடியவை. ஆயுத பரிகரண உடன்பாடு — ஏற்பட்டால், அது சரியாக கடைப்பிடிக்கப் படுகிறதா? என்று பார்க்கவும் இவை சரியான கருவிகளாக — விளங்கக் கூடியவையாம்.

தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியம் தயாரித்து செலுத்திய விண்வெளி மிதவைக் கலங்கள் கப்பல்களுக்கும் — விமானங்களுக்கும் வழிகுறிப்பிட்டு தருவதுடன் நில்லாமல் ஏவுகணைகள் சரியான இலக்கை துல்லியமாகத் தாக்கும் வண்ணம் நெறிப்படுத்தவும் வல்லவை. அமெரிக்க ஏகாதிபத்தியம் 1988—ல் இயக்கப் போகும் சங்கிலித் தொடரான 18 செயற்கைக் கோள்கள் உலகின் எந்தப் பகுதியிலும் தரைப்படை — விமானப்படை — கடற்படை அணிகளுக்கு தாக்கும் இலக்கை மிகத் துல்லியமாக காண்பித்து கொடுக்குமாம். இப்படியாக, ஏகாதிபத்திய முதலாளித்துவமானது ஒரு மூன்றும் உலக மகாயுத்தத்திற்கான தயாரிப்பை மிக வேகமாக செய்து கொண்டிருக்கிறது.

### மனித உயிர்களை மதிக்காத ஏகாதிபத்தியம்

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் நிறுத்தியிருக்கும் — பெர்ஷிங்—2 என்ற ஏவுகணை ஒன்று ஹிரோஷிமாவில் 40 வருடங்களுக்கு முன்பு போடப்பட்ட குண்டின் சக்தியை ஒத்தது. மேற்கு ஜெர்மனியில் ''முல்டாங்கென்'' என்ற இடத்தில் அமெரிக்கா தனது இராணுவ தளத்தை அமைத்துள்ளது. இவ் இராணுவ தளத்திலிருந்து கடந்த ஜனவரி மாதம் பெர்ஷிங்—2 ஏவுகணைகளை மோட்டார் வண்டிகளில் ஏற்றிச் சென்ற போது ஒரு மலைப்பாதை வளைவில் ஏற்பட்ட அதிர்ச்சியால் மோட்டார் வாகனத்திலிருந்து ஒரு ஏவுகணை விழுந்து உருண்டு போனது. நல்ல வேளையாக இவ் ஏவுகணை வெடிக்கவில்லை. இது வெடித்திருந்தால் ஹிரோஷிமாவில் 40 வருடங்களுக்கு முன் பல லட்சம் மக்களை உயிரோடு சமாதியாக்கியது போல மேற்கு ஜெர்மனியிலும் பல லட்சம் மக்கள் உயிரோடு சமாதியாகி இருப்பார்கள். உலக மக்களின் உயிருக்கும் — உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்காத இச் செயல்களை செய்பவர்கள் தான் ''உலக சமாதானம்'' — ''அணு ஆயுத ஒழிப்பு'' — ''இந்து மகா கடல் அமைதிப் பிராந்தியம்'' என்று கொக்கரித்துக் கொண்டு ஒரு மூன்றும் உலக மகா யுத்தத் தயாரிப்பை மேற்கொள்கின்றனர்.

### ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை வலுவடைகிறது

இவர்களின் இந்த மூன்றும் உலக மகாயுத்த தயாரிப்பிற்கு உலகளாவிய ரீதியில் தினம், தினம் எதிர்ப்பு அலைகள் வலுப் பெறுகின்றன. மூன்றும் உலக தயாரிப்பின் மற்றோர் பகுதியாக — அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் பசுபிக் கரையில் உள்ள கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள வாண்டன் பர்க் படைத் தளத்திலிருந்து ஏவுகணை மூலம் அதி நவீன தன்மை கொண்ட பறக்கும் அணு குண்டுகளை 8680 மைல்கள் தூரத்திலுள்ள ஆஸ்திரியா கடலில் விழச்செய்து சோதனை நடாத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் திட்டமிட்டது. இதை அனுமதிக்க முடியாதென ஆஸ்திரேலியா திட்டவட்டமாக கூறிவிட்டது.

இந்த பறக்கும் அணு குண்டு சோதனைக்காக அமெரிக்க ஏகாதிபத்திய அணுகுண்டு யுத்தக்கப்பல் ஆஸ்திரேலியா — நியூசிலாந்த் கடல் பகுதிக்கு வந்தால் நியூசிலாந்து துறைமுகங்களில் அவ்யுத்தக்கப்பல்களை அனுமதிக்க முடியாதென நியூசிலாந்து அறிவித்து

(6ம் பக்கம் பார்க்க)

> எந்த ஒரு தேசிய இனமும் தனது இறைமையை நிலை நிறுத்துவதும் பறிக்கப்பட்ட பின் அதனை மீளப்பெற்று கொள்ள முயற்சிப்பதும் தேசத் துரோகமோ அன்றி, பயங்கரவாதமோ என உலகில் எந்த ஒரு சாசனமும் கூறவில்லை.
>
> தமிழ் ஈழ தேச பிதா தங்கத்துரை

படிப்பகம்

www.padippakam.com



# அரச பயங்கரவாதிகளின் எதிர்ப்புரட்சித் திட்டம்

சுதந்திரமடைந்த காலம் தொட்டு, மலையக மக்களின் எழுச்சி மிக்கப் போராட்டங்களை சந்திக்க திறனற்ற இலங்கை அர்சு தொடர்ந்து ஒடுக்குமுறைகளை நடத்தி மலையக மக்களை ஒடுக்கி வருவது தெரிந்ததே. அன்று 1948ல் மலையக மக்களின் குடியுரிமையை பறித்து நாடற்றவர்கள் என்ற முத்திரையை குத்தி மிகவும் மோசமான நிலையில் கல்வியறிவற்று வாழ்க்கைத்தரம் உயர்ச்சி என்ற சொல்லுக்கே இடமில்லாமல் செய்து வருகின்றது.

இது இவ்வாறிருக்க, ஸ்ரீ லங்கா பேரினவாத அரசினால் தூண்டிவிடப்படும் இனவாதப் பேயினால் தங்கள் சிறு உடமைகளையும் இழந்து, உயிரையும் இழந்து பரிதவிக்கின்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், மேலும் தொடர்ந்து ஒடுக்குமுறைகளை நிகழ்த்தி வரும் இவ் இனவெறி அரசு, தமிழ் பேசும் மக்கள் தங்கள் விடுதலை பெற தமிழ் ஈழம் பெறுவதே நோக்கமாகக் கொண்டு அத்தீர்வில் உறுதியாயுள்ள நிலையை குலைக்கும் முகமாக செயல்பட்டு வருகிறது.

மலையக மக்களை பயமுறுத்தி, நிர்ப்பந்தித்து தமிழ் ஈழ எதிர்ப்பு ஊர்வலம் நடத்துவதில் முனைந்து நிற்கின்றது.

தனிநாட்டு கோரிக்கையை தாங்கள் ஏற்கவில்லை என்பதை தோட்டத் தொழிலாளர்கள் நிரூபிக்க வேண்டுமெனவும், அதற்காக மலையகத்தின் முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்த வேண்டுமெனவும் தோட்ட துரைமார் தொழிலாளர்களை நிர்ப்பந்தம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழ் ஈழப் போராட்டமானது இக்காலத்தில், அனைத்து தமிழ் பேசும் மக்களையும் வென்றெடுத்து போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொண்டு வரும் நேரம் ஸ்ரீ லங்கா அரசின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளே பல தந்திரங்களை கையாள்வது முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத விளைவாகும்.

இதன் தவிர்க்க முடியாத நிலையின் காரணமாக ஸ்ரீ லங்கா தரகு — முதலாளித்துவ அரசு இப்படியான நடவடிக்கைகளில் திட்டமிட்டு இறங்கி மக்களை நிர்ப்பந்தித்து உலக ரீதியாக பிரச்சாரங்களை மேற்கொண்டு தன்னை நியாயப்படுத்திக் கொள்ள முனைகிறது.

ஆனால் ஸ்ரீ லங்கா இனவெறி அரசின் சூழ்ச்சிகளை தீர்க்கமாகவே புரிந்து கொண்டுள்ளனர் தமிழ் பேசும் மக்களும் உலக ஒடுக்கப்பட்ட மக்களும்.

அதித ஒடுக்குமுறைக்குள் சிக்குப்பட்டிருப்பவர்களும் — பாட்டாளி மக்களாக திகழ்ந்து கொண்டிருப்பவர்களுமான மலையகத்தின் புரட்சி சக்திகளுமான மலையக மக்களே தமிழ் ஈழப் போராட்டத்தின் கதாநாயகர்கள் ஆவர்.

இவர்களை திசை திருப்பி விட முனைகிறது ஸ்ரீலங்கா இனவெறி அரசு.

ஆனால் விடுதலையை வென்றெடுக்க தீவிரமாக உள்ள மலையக மக்கள் முன், ஸ்ரீ லங்கா அரசின் நிர்ப்பந்த நடவடிக்கைகளும் — குழப்பி விட முயலும் கருத்துக்களும், எந்நாளும் பலனளிக்கப் போதில்லை.

# புரட்சித் தோழர் பகவத்சிங்



## தோழர் பகத்சிங்

பூகோளத்தின் மேற்பரப்பு முழுவதிலும் ஏகாதிபத்திய, முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டங்கள் உக்கிரமடைந்துவரும் வேளையில் ஏகாதிபத்திய நாய்களானது போராடும் மக்களை ஈவிரக்கமின்றி மென்மேலும் அடக்குமுறைக்குள்ளாக்குவதும் - போராடும் மக்களின் தலைவர்களை சுட்டுக் கொல்லுவதும், தூக்கிலிடுவதும் அதன் பல்லவியே. ஆனால் இப் புரட்சியாளர்களை தங்கள் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாக்குவதன் மூலம் வரலாற்று சக்கரங்களை தடுத்து நிறுத்தலாம் என்று ஒடுக்குமுறையாளர்கள் எண்ணிய நேரமெல்லாம் அவர்களின் எண்ணங்கள் தூள் தூளாக்கப்பட்டன.

ஏகாதிபத்திய வெறி நாய்களின் கோரப்பசிக்கு இரையானவர்களில் புரட்சியாளர் தோழர் பகத்சிங்கும் ஒருவர். 1907.09.28ல் பிறந்த பகத்சிங் 1931.03.23ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளால் தூக்கிலிடப்பட்டார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் அடக்குமுறைக் கொடுமைகளினால் அடிமை இருளில் புதையுண்டு கிடந்த இந்திய தேச மக்களுக்கு சுதந்திர காற்றை சுவாசிக்கச் செய்து சமூகப் புரட்சியை - ஏற்படுத்தி சமவுடைமைத் தென்றல் வீசச் செய்யும் நோக்குடன் போராடியவரே தோழர் பகத்சிங். இவர் அகிம்சை முறைப் போராட்டங்களை நிராகரித்து புரட்சிகர மக்கள் போராட்டப் பாதையிலே தனது செயல்திட்டங்களை வகுத்தவர். பகத்சிங்கை தூக்கிலிடுவதன் மூலம் இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டத்தை அடக்கலாம் அல்லது மழுங்கடிக்கலாம் என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நினைத்த போது அது முடியாமலேயே போய் விட்டது.

''கருத்துக்கள் மக்களை பற்றிக் கொள்ளும் போது பெரும் சக்தியாய் உருவெடுக்கும்'' என்றார் வித்தகர் கார்ல் மார்க்ஸ். இதேபோல தோழர் பகத்சிங்கின் கருத்துக்கள்

## 54 வது நினைவு தினம்

இன்று லட்சோபலட்சம் ஒடுககப்பட்ட மக்களை பற்றிக் கொண்டு விட்டது. தோழர் பகத்சிங்கின் கருத்துக்களால் பற்றிக் கொள்ளப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முன்னால் இந்த ஏகாதிபத்திய, முதலாளித்துவ வாதிகளின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் நிச்சயம் மண் கவ்வியே தீரும்.

தோழர் பகத்சிங் தூக்கிலிடப்பட்ட 54ம் நினைவு நாளில், பகத்சிங் நேசித்த மக்களை மகிழ்ச்சியடைய செய்வதே அவருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்கும். ''இந்நிலையில் தோழர் பகத்சிங்கின் நீதிமன்ற விசாரணையை நினைவு கூருவோம்.''

''உலகத்தின் சட்டம் புரட்சி! மனித முன்னேற்றத்தின் ரகசியம் புரட்சி! இதிலே புனிதத்துவச் சங்கிலிகள் பிணைக்கப்பட வேண்டிய அவசியம் கிடையாது. தனி நபர்களைப் பழிவாங்கும் நோக்கமும் புரட்சி நடவடிக்கைகளின் அம்சமாகாது.''

''ஏகாதிபத்திய இராணுவத்தின் சிப்பாய்களை போன்றவர்களல்ல நாங்கள். அவர்கள் மனித இயந்திரங்கள். எந்தவித ஈவிரக்கமுமின்றி கட்டுப்பாடாக கொலை-செய்வதற்கு மட்டுமே கற்பிக்கப்பட்டவர்கள் அவர்கள். நாங்கள் மனிதனை மதிக்கிறோம். மனித உயிர்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு நேசிக்கிறோம்.''

''ஊமைகளாய், குருடர்களாய், செவிடர்களாய் இந்த தேசத்தில் வாழும் தொழிலாளரின் துயர நிலையை நாங்கள் உணருகிறோம். எங்களது இதயம் அவர்களுக்காக இரத்தம் சொட்டுகிறது. அவர்களது அழுகுரலை அடக்க இந்த அரசாங்கம் மிருகத்தனமாக நடந்து கொள்வதை எங்களால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. எங்கள் ரத்தம் கொதிக்கிறது.

தானியங்களை உற்பத்தி செய்கிற விவசாயி தனது குடும்பத்தோடு பட்டினிகிடக்கிறான். உலக மார்க்கெட்டுக்கு துணிகளை நெய்து கொடுக்கின்ற நெசவாளி தன்னையும் தனது குழந்தைகளின் உடலையும் மூடிக் கொள்ள முடிவதில்லை. பிரமாண்டமான மாளிகைகள் கட்டித்தருகின்ற கொத்தர்கள் - கொல்லர்கள் -தச்சர்கள் குடிசையில் வாழ்ந்து சாகிறார்கள்: மறுபுறத்திலோ உழைக்காமல் உண்ணும் ஒட்டுண்ணிகள் தங்கள் சுகபோகங்களுக்காகப் பல லட்சங்களை அநியாயமாக செலவு செய்கின்றனர். இந்தக் கொடுமைகளை அடியோடு மாற்றுவதே சமூகத்தை சோஷலிஸ அடிப்படையில் உருவாக்குபவர்களின் கடமையாகும்.

புரட்சி-மனிதனை மனிதன் சுரண்டுவதற்கும் ஒரு நாட்டை மற்றொரு நாடு சுரண்டுவதற்கும் மரண அடி கொடுக்கும். வெளிநாட்டு சுரண்டல் கூட்டம், உள்நாட்டு சுரண்டல் கூட்டம்- இந்த இரண்டு கொள்ளையர்களின் கோரப்பிடியில் சிக்கி அவலப்படும்-மக்களை மீட்டெடுக்கும். அவர்களுக்கு மகிழ்ச்சி கலந்த நல்வாழ்வை மலரச் செய்யும். இந்நாடு மக்களுக்கே சொந்தம் என்ற நிலையை உருவாக்கும். உருவாக்கியே தீரும்.

## பொருளாதாரப்.....

( 5ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் நேச நாடுகளாக ஆஸ்திரேலியா — நியூசிலாந்த் ஆகிய நாடுகள் 33 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இராணுவ உடன்படிக்கை செய்து கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியா பிரதமர் ஹாக் — நியூசிலாந்து பிரதமர் லாங்கே ஆகியோரின் இந்த முடிவுக்கு அந்தந்த நாட்டு மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பே முக்கிய காரணமாகும். ஆஸ்திரேலியா — நியூசிலாந்து ஆகிய நாடுகளில் தோனறிய ஏகாதிபத்திய எதிர்ப்பு அலையானது. —— பெல்ஜியம் — ஹாலந்து ஆகிய நாடுகளுக்கு பரவிப் பிடிக்கத் தொடங்கி விட்டது. பெல்ஜியம் — ஹாலந்து ஆகிய நாடுகள், குறிப்பிட்ட காலவரைக்குள் அமெரிக்க ஏகாதிபத்தியம் அணுகுண்டுகளை குவித்து வைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு கட்டுப்பட முடியாதென அறிவித்துவிட்டன.

### எதிர்ப்பின் மத்தியிலும் யுத்த தயாரிப்புகள்

இந்நிலமைகட்கு மத்தியிலும், அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகம் முழுவதிலும் அணுகுண்டுத் தளங்களை அமைக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. ஐரோப்பாவில் ஸ்பெயினில் — அமெரிக்காவின் தெற்கு எல்லையில் போர்ட் ரீகோ — வடக்கே கனடா, ஐஸ்லாந்து — போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த அட்லாண்டிக் பெருங் கடல் தீவு — தென் அமெரிக்க கடல் பகுதியில் உள்ள பெர்முடா தீவு — சீனு, ஜப்பான் கடல் பகுதியில் உள்ள பிலிப்பைன்ஸ் நாடு — இந்து மகா சமுத்திர பிராந்தியத்தின் இதயத்தில் அமைந்துள்ள டியாகோகாசியா ஆகிய இடங்களில் உள்ள அணுகுண்டு தளங்களில் அதி நவீன தன்மை கொண்ட பறக்கும் அணுகுண்டுகளை குவித்து வைக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் திட்டமிட்டுள்ளதாம்.

இப்படியான, ஏகாதிபத்திய — முதலாளித்துவவாதிகளின் ஒரு மூன்றும் உலக மகாயுத்த தயாரிப்புக்கள் யாவும் மக்கள் சக்திமுன் மண்ணுங்கட்டிகளே. இவர்களின் இவ் மூன்றும் உலக மகாயுத்த தயாரிப்புகள் யாவும் மக்கள் சக்திமுன் தவிடுபொடியாகியே தீரும். ஆனல் மக்களின் ஆதரவுடன் தனித்து நின்று அரசியலை எங்கோ விட்டுவிட்டு வெறுமனே ஆயுதத்தை மாத்திரம் தூக்கினல், இவ் ஏகாதிபத்தியவாதிகளின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை முறியடிக்க முடியாது. இப் போராட்ட முறையானது, மக்களை விரக்தியின் விளிம்பிற்கு தள்ள வைப்பதோடு — போராட்டமானது மேலும் பல சிக்கலான பரிணாமங்களையே அடையும். ஒரு வெகுஜன புரட்சிக் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட ஒரு முற்போக்கான பரந்துபட்ட மக்கள் போராட்டத்தின் மூலமே ஏகாதிபத்திய, முதலாளித்த வாதிகளின் மூன்றும் உலக தயாரிப்புக்களை தவிடு பொடியாக்கி உலகளாவிய ரீதியில் ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஈழ விடுதலையே சிங்கள மக்களின் விடுதலைக்கு வழி வகுக்கும்

தமிழ் பேசும் மக்கள் வாழும் பாரம்பரிய பிரதேசங்களை இனவெறி கொண்ட ஸ்ரீலங்கா தரகு-முதலாளித்துவ அரசின் கொடூரப்பிடியில் இருந்து முற்றாக விடுவித்து தமிழ் ஈழ அரசை நிறுவுவதன் மூலமே தமிழ் பேசும் மக்கள் முழுமையாக பாதுகாக்கப்படுவார்கள். அத்துடன் நவபாஸிஸ அரசின் இன ஒழிப்பு அடக்கி வைக்கக் கூடியதாக இருக்கும். மேலும் சுதந்திர தமிழ் ஈழ அரசின் உதயமே, சிங்கள மக்களை இனவாதத்திற்குள் இருந்து மீட்டெடுத்து-தங்கள் விடுதலைக்காக போராடும் நோக்கில் செயல்பட வழி வகுக்கும்.

இனவாதத்தை தூண்டி விட்டு அரசியல் சுகுல் காய்ந்து கொண்டிருந்த இத் தரகு-முதலாளித்துவ அரசு, ஈழம் உதயமானால் தங்கள் சூழ்ச்சிகள் பலனளிக்காது என்பதை தீர்க்கமாக உணர்ந்துள்ளது. இதனால் எப்படியும் தமிழ் ஈழப் போராட்டத்தை நசுக்கிவிட கங்கணம் கட்டிக் கொண்டு தமிழ் பேசும் மக்களையே பூண்டோடு அழித்து விடுவதில் முனைந்துள்ளது.

இதன் முயற்சியாகவே, உலகில் எங்கெங்கு மனித வதை நிகழ்த்தும் நாடுகள் இருக்கின்றதோ அங்கெல்லாம் தனது நேசக்கரத்தை நீட்டி தன்னை வலுப்படுத்துவதற்காக உதவி கேட்டும்,. உதவி வாங்கிக் கொண்டும் இருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் சர்வதேச பயங்கரவாதிகளுடனான உறவுகளினால், இராணுவ வலுண்மையும்-அராஜக நிகழ்ச்சிகளும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருக்கிறதே அன்றி மக்களின் வாழ்க்கைத் தரமும் இலங்கையின் பொருளாதாரமும் சிறிதும் கூடவில்லை. இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் மோசமான நிலைக்கு தள்ளப்படுகிறது.

இன்று இனவாதம் ஆழமாக புரையோடி உள்ளதால் சிங்கள மக்கள் அரசின் மக்கள் நலன் கருதா சுயநல வெளிப்பாட்டை புரிந்து கொள்ளாது இருக்கிறார்கள் எனலாம். ஆனாலும் அரசின் செயல்பாடுகளை இன்று சிறிது சிறிதாக அறிந்து கொண்டு வருகிறார்கள் என்றால் மிகையாகாது. புரட்சிக் கம்மியூனிஸ்ட் கழகம் தமிழ் ஈழ கோரிக்கை முறையானதே என்பதை வெளிப்படையாக கூறிவருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஸ்ரீலங்கா சோவனிஸ அரசின் மனிதநேயம் கருதா செயல்பாடுகளினால் சிங்கள மக்கள் மத்தியில் ஸ்ரீலங்கா அரசின் மேல் காழ்ப்புணர்ச்சி வளர்ந்து வருவது தவிர்க்க முடியாததாகிறது. உதாரணமாக, 21.12.1984 அன்று யாழ்புகையிரத நிலையத்தில் விடுதலைப் போராளிகளாய் கைது செய்யப்பட்ட பொலிஸ் உயர் அதிகாரிகளை கைது செய்த இயக்கம் கோரியிருந்த பணையத் தொகையை தனது பிடிவாதத்தாலும் மனிதநேயம் மதிக்காத தன்மையினாலும் உயர் அதிகாரிகளின் இரங்கலை மறுத்து செயல்பட்டமை சிங்கள மக்கள் அறியாததல்ல. இக்காரணமும் அரசின் மீதான நம்பிக்கையின்மையையே வளர்த்துள்ளது.

இனப் படுகொலைகளை நடாத்தியும் இனங்களை பூண்டோடு அழிப்பதிலுமே தன்னை பர்துகாத்துக் கொள்ளலாம் என நினைத்து, அம் முயற்சியில் முனைந்து நிற்றும் ஸ்ரீலங்கா நவபாஸிஸ அரசு தமிழ் ஈழ உதயத்தின் பின்னர் சிங்கள மக்களால் தூக்கி எறியப்படுவது நிச்சயமாகும்.



இல்வாழ்வா போராட்டமா? போராட்டமா இல்வாழ்வா? எனத்தவிக்கும் பாலஸ்தீன மக்கள்.

கொள்கைகள் வெற்றி அடைகின்றன, ''சமரசம்'' செய்து கொள்வதில்லை.

ஜே.வி. ஸ்டாலின்

## இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன

இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் 05.03.1985 இலும் நடைபெற்றது. இந்திய கடல் எல்லைக்குள் 5 படகுகளில் 23 தமிழக மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா அரச படைகளின் ஹெலிக்கப்டர்கள் இவர்களின் தலைக்கு மேலே பறந்தது. சிறிது நேரத்தில் 2 எல்லைக் காவல் ரோந்துப் படகுகளில் வந்த ஸ்ரீலங்கா கடற்படையினர் அவ் 23 தமிழக மீனவர்களையும் அடித்து நொறுக்கி கடலில் தூக்கிப் போட்டனர். பின்னர் நீருக்கு துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இவ் மீனவர்களில் அல்லப் பெருமாள் என்பவரைத் தவிர அனைவரும் நீந்திக் கரை சேர்ந்தனர். அல்லப் பெருமாள் என்பவரை இதுவரை காணவில்லை.

இதேபோன்று 10.03.1985 இலும், 20.03.1985 இலும் நடைபெற்றது. 10.03.1985ல் இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த சுமார் 30 மீனவர்களை ஸ்ரீலங்கா அரச கடற்படையினர் பெல்ட்டுக்களாலும், இரும்பு தடிகளாலும் தாக்கியதோடு மீனவர்கள் பிடித்திருந்த மீன்கயையும் கொள்ளையடித்து சென்றனர். இத்தாக்குதல்களால் சத்தியநாதன்-ஆறுமுகம் ஆகிய இந்திய மீனவர்கள் படுகாயமடைந்தனர். 20.03.1985 இலும் ராமேஸ்வரம் மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத் தாக்குதலின் போது 25,000 ருபா பெறுமதியான மீன்கள் உட்பட பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.




இரு ஓநாய்களின் சந்திப்பு

## இஸ்ரேலிய முகாம்களில் பாலஸ்தீன குழந்தைகள் சித்ரவதை

லண்டன், பிப். 24-

இஸ்ரேலிய முகாம்களிலும், சிறைகளிலும் உள்ள பாலஸ்தீனக் குழந்தைகள் சித்ரவதை செய்யப்படுவ தாகவும், வெறியர்களின் பாலுணர்வுக்கு இரையாக்கப் படுவதாகவும் லண்டனில்இருந்துவெளியாகும் மார்னிங் ஸ்டார் பத்திரிகை கூறி உள்ளது.

பாலஸ்தீனக் குழந்தைகளை பார்க்க செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளோ வழக்கறிஞர்களோ அனுமதிக்கப் படுவதில்லை. சித்ரவதை தாளாமல் பல குழந்தைகள் தற்கொலை செய்து கொள்கின்றன என்று மார்னிங் ஸ்டார் கூறுகிறது.

## அமெரிக்காவில் பரவும் பட்டினி

நியூயார்க், பிப். 28-

பணக்கார நாடான அமெரிக்காவிலும் பட்டினியால் வாடுகிறவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது ஏறத்தாழ 2 கோடி பேர் அங்கு பட்டினியால் வாடுவ தாக ஹவார்டு பல்கலைக்கழகத்தின் ஆய்வுதெரிவிக்கிறது. வறுமையை ஒழிப்பதற்கு அதிக பணம் செலவிடும்படி அமெரிக்க அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

நன்றி தினசரி

என்னை வழிநடத்திச் சென்றவர்கள் பலர் திடீரென்று மறைந்து போகிறார்கள். அவர்களை நான் எப்போதும் மானசிகமாய் என்னோடு இருத்தி வைத்துக் கொண்டு ஒவ்வொரு பிரச்சினைக்கும் எனக்கு மயக்கமோ, கலக்கமோ, பிரமிப்போ ஏற்படும் போது அவர்களைப் பற்றிய நினைவுகளோடு கலந்து பேசி முடிவுக்கு வருகிறேன். அண்மையில் ஒருமுறை பிரஷ்னேவ் சொன்னார்:— ''பெரிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் சிரமம் நேர்கிற போது நான் தோழர் லெனினை நினைத்துக் கொள்வேன். அந்த நினைவின் ஒளியில் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முயலுகிறேன்'' என்று. இவ்வாறு சொன்னதோடு மட்டுமல்ல, ''இந்த பழக்கத்தைக் கூட நான் லெனின் மூலம்தான் கற்றுக் கொண்டேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தோழர் லெனின் தோழர் மார்க்சை நினைவு கொள்வாராம்'' என்றார்.

—'ஓர் இலக்கியவாதியின் கலையுலக அனுபவங்கள் என்ற ஜெயகாந்தன் நூலில் இருந்து.

www.padippakam.com



# செய்திகள்

## மக்கள் வயிற்றில் அடித்து, சீறீலங்கா அரசு ஆயுதங்களைக் குவிக்கிறது.

வங்கி ஊழியரின் மேலதிக வேலைக்குப்பதில் 40% ஊதிய உயர்வு கோரி மேற்கொண்ட வேலை நிறுத்தத்தை வங்கிக் கொள்ளையை விட மோசமானது என வர்ணித்த சிறீலங்லா அரசு. இலங்கை மக்களை ஒடுக்குவதற்கு பெருமளவு இராணுவ தளபாடங்களை கொள்வனது செய்து வருகிறது. அண்மையில் அமெரிக்காவிடம் இருந்து நவீன போர் ஆயுதங்கள் பொருத்தப்பட்ட 6 ஹெலிகாப்டரை சில தினங்களுக்கு முன் வாங்கியுள்ளது. இவற்றின் மதிப்பு 40 கோடி இலங்கை ரூபாவாகும். இதேபோல் பிரிட்டனில் இருந்து பல கோடி ரூபா பெறுமதியான பயங்கரமான 10 பீரங்கிப் படகுகளையும் வாங்கியுள்ளது.

## அமெரிக்கா — இஸ்ரேல் தனது நண்பரை தேடியலைகிறது

"அமைதி காக்கும் படை" என்று கூறிக் கொண்டு லெபனுனில் புகுந்த அமெரிக்கா தனது நண்பர் ஒருவரை தேடி அலைகிறது. ஜெர்மனியில் ஹிட்லர் ஆண்ட பொழுது சித்ரவதை முகாம் ஒன்றில் 4,00,000 பேரை விஷவாயுவைப் பாய்ச்சிக் கொன்ற டாக்டர் மென்ஜிலி இன்னும் உயிருடன் இருக்கிருன். இவன் லத்தீன் அமெரிக்கா நாடு ஒன்றில் இருக்கிருன். இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் யூனியன் படைகள் ஜெர்மனிக்குள் நுழைந்ததும் பிரிட்டிஷ் ரகசிய போலீஸ் உதவியுடன் மென்ஜிலி தப்பிவிட்டான்.

சோவியத் யூனியனுடன் யுத்தம் வந்தால் மென்ஜிலியை பயன் படுத்த அமெரிக்கா லத்தீன் அமெரிக்க நாடு முழுவதும் தேடியலைகிறது. இஸ்ரேலும் யூதப் படுகொலைக்கு பழி வாங்க மென்ஜிலியை தேடியலைகிறது.

## முன்னுள் ஸ்ரீலங்கா ஹைகமிஷனரின் தில்லு முல்லுகள் அம்பலம்

சென்னையில் இருந்த சர்சைக்கிடமான ஸ்ரீலங்கா அரசு ஹைகமிஷனர் பியசேன வாபஸ் பெறப்பட்டதற்கான காரணங்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன. இவர் கடந்த ஆண்டு பிப்பவரி மாதமே சென்னையில் ஸ்ரீலங்கா துணைக் கமிஷனராக பொறுப்பேற்றுர். ஒரு பாட்டில் மது புட்டி கொடுத்து சென்னையில் பத்திரிகையாளரை விலைக்கு வாங்கலாம் என்று பியசேன கொழும்பில் கடந்த ஆண்டு பேசியிருந்தார். இவர் வாபஸ் பெறப்பட்டதற்கான காரணம் சென்னையில் சூட்சேபகரமான அறிக்கை வெளியிட்டதே என முன்பு கூறப்பட்டது. ஆனுல் அவர் பெண் விவகாரத்தில் சம்பந்தப்பட்டதையடுத்தே இவர் வாபஸ் பெறப்பட்டார்.

பியசேன தனது சமூக செயலாளராக மசாஜ் கிளப்பில் பணிபுரியும் திருமதி லோரட்டாவை நியமித்து அப் பெண்ணுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளை தனது கணக்கிலிருந்தே கொடுத்தார். ஆனுல் உண்மையில் வெளிநாட்டு சர்வீஸ் விதிகளின் படி சமூக செயலாளர் என்ற ஒரு பதவியே கிடையாது. பியசேனவுக்கும், லோரட்டாவுக்கும் உள்ள உறவு குறித்து அவரது மனைவியும், மகளும் ஆட்சேபம் தெரிவித்திருந்தனர். இதனுல் உள்ளூர் போலிசாரை அழைத்து மனைவியும், மகளும் தன்னை பார்க்காதபடி செய்தார். இச்சம்பவம் கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்றது. இது நடந்த சில தினங்களின் பின்னர் பியசேனவின் மகள் ஸ்ரீலங்கா துணைக் கமிஷனர் அலுவலகத்திற்கு வந்து ரகளை செய்தார்.

பியசேனவின் இந்த நடவடிக்கைகள் இந்திய மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டது. பியசேனவின் இந்நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து கடந்த டிசம்பர் முதல் வாரத்தில் பியசேனவை அந்தப் பதவியில் இருந்து ஜே .ஆர். ஜெயவர்த்தனா வாபஸ் செய்தார்.

## தற்கொலைப் படை விடுதலை வீரர் தாக்கி 100 துருப்புக்கள் மடிந்தன

ஸ்ரீலங்கா சோவனிஸ அரச படைகளுக்கு பயிற்சி அளிப்பவர்களும் — ஸ்ரீலங்கா அரச படைகளுடன் சேர்ந்து தமிழ் ஈழ மக்களை கொன்றொழிப்பவர்களுமான இஸ்ரேல் சியோனிஸ அரச படைகள் லெபனுன் தெற்கு பகுதியை ஆக்கிரமித்து அங்குள்ள மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக கொலை நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது உலக ஒடுக்கப்பட்ட மக்கள் அறிந்த விடயமே. இவ் ஆக்கிரமிப்பை எதிர்த்து, பலஸ்தீன—லெபனுன் விடுதலை வீரர்கள் இராணுவ ஒழுங்கு முறையையும் மிஞ்சவல்ல விதத்தில் வீரஞ்செறிந்த போராட்டத்தை நடாத்தி வருகிருர்கள்.

கடந்த பிப்பரவரி மாதம் பலஸ்தீன தற்கொலைப் படை விடுதலை வீரர் ஒருவர் ஒரு கார் நிறைய வெடி மருந்துகளை ஏற்றிக்கொண்டு கும்பலாக நின்ற இஸ்ரேலிய துருப்புக்கள் மீது மோதினுர். வெடி மருந்து — வெடித்து சிதறியதில் 100க்கு மேற்பட்ட இஸ்ரேலிய சியோனிஸ அரச துருப்புக்கள் மடிந்தன.

## சீறீலங்கா படைகளுக்கு சீனர்வில் பயிற்சி

சீறீலங்கா நவ பாஸிஸ அரச படைகளுக்கு "கொரில்லாத் தாக்குதல்களை முறியடிக்கும் பயிற்சியை" அளிப்பதற்காக 300 சிறீலங்கா இராணுவத்தினரை சீனாவுக்கு அனுப்பி வைக்க சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே இஸ்ரேல் எருமைக்கடாவிடம் பயிற்சி பெற்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அதி நவீன ஆயுதங்களுடனும் வீதி உலாவி வரும் சீறீலங்கா தரைப்படையில் 16,000 பேர் இருந்தும் தமிழ் ஈழப் போராட்டத்தை அடக்க முடியாததே, சீன நாட்டு பயிற்சிக்குக் காரணமாகும்.

## ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை வலுவடைகிறது

ஏகாதிபத்திய, முதலாளித்துவ உற்பத்தி முறையால் ஏற்பட்டுள்ள உள் முரண்பாடுகளை தீர்க்க திறனற்ற ஏகாதிபத்தியமானது ஒரு மூன்றும் உலக மகாயுத்தத்திற்கான தயாரிப்பை செய்து வருகிறது. லண்டன் அருகே மோல்ஸ்வாத் என்ற இடத்தில் அமெரிக்காவில் இருந்து இறக்கப்பட்ட நீண்ட தூர ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்து இருக்கிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். சோவியத் யூனியனுக்கு (யூ.எஸ்.எஸ்.ஆர்) எதிராக நேட்டோ (அமெரிக்க ராணுவகூட்டு) நாடுகளின் திட்டப்படி இவை வைக்கப் பட்டு உள்ளன.

இந்த அணு ஏவுகணைகளை அகற்றக்கோரி அந்தப் பகுதியில் ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். 2,000க்கு மேற்பட்ட போலீசாரும், இராணுவத்தினரும் சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்த மக்களை விரட்டி அடித்தனர்.

ஏவுகணைகள் வைக்கப்பட்டுள்ள இடத்தை சுற்றி இப்போது இரும்பு முள்வேலி போடப்பட்டுள்ளது. 1988—ம் ஆண்டுக்குள் 64 ஏவுகணைகளை அமெரிக்காவில் இருந்து கொண்டு வர பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் திட்டமிட்டுள்ளது.

## கல்லூரி ஆசிரியர்களுக்கும் கடற்படைப் பயிற்சியாம்

சிறீலங்கா அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளி வர்க்கமானது தனது உல்லாச வாழ்க்கைக்காக பல சிங்கள மக்களை தமிழ் மக்களின் விடுதலைத் தீயில் பலியெடுத்து வருகிறது. இதன் அடுத்த கட்டமாக 6,000 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் கடற்படைப் பயிற்சி அளிக்கப்படுமாம். இவர்கள் காலப் போக்கில் சிறீலங்கா கடற்படையில் நிரந்தர ஊழியர்கள் ஆக்கப் படலாம்.

## அமெரிக்காவின் தெற்காசிய கைப் பொம்மைகள் சந்திப்பு

பாசிச வெறியன் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், மக்கள் விரோதி ஹியாவுல்கக்கும் 29—09—1985 அன்று அமெரிக்காவின் தெற்காசிய எதிர்ப்புரட்சித் தளமான பாகிஸ்தானில் சந்திப்பர். இவர்களின் சந்திப்பு பாகிஸ்தான், சிறீலங்கா, தமிழ் ஈழ மக்களின் விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குவது பற்றிய சதித்திட்டங்கள் தீட்டுவதற்கே.

## தமிழ் ஈழத்தை ஆதரித்து சிங்கள மொழியில் துண்டுப்பிரசுரங்கள்

வடபகுதி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு "ஜயவேவா" தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெல்க! வடபகுதியில் இருந்து இராணுவத்தை அகற்று போன்ற வாசகங்கள் பொறித்த துண்டு பிரசுரங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

இதுபற்றி பாராளுமன்றத்தில் பிரதி அமைச்சர் அத்தநாயக்கா குறிப்பிடும் போது வடபகுதி பயங்கரவாதிகளுடன் தென்பகுதியில் உள்ள சிலர் இணைந்து செயல்பட முயல்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

அண்மையில் 20 தொழிற்சங்கங்கள் தமிழ் மக்களின் மீதான அரச காட்டைத் தனத்துக்கும், சிறீலங்கா இடதுசாரி சக்திகளின் மீதான அடக்குமுறைகளை யும் வன்மையாக கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் ஆயுதங்கள் குவிகிறது

இஸ்ரேலிடம் இருந்து பல கோடி டொலர் பெறுமதியான நாசகார ஆயுதங்களை சிறீலங்கா தரகு முதலாளித்துவ அரசு வாங்கி குவித்து வருவது யாவரும் அறிந்ததே. அண்மையிலும் இரண்டு இரட்டை இயந்திரங்களைக் கொண்ட இஸ்ரேல் ரோந்துப் படகுகளை சிறீலங்கா வாங்கியுள்ளது. இப் படகுகளை இயக்க சிறீலங்கா கடற்படையினர் இஸ்ரேலில் பயிற்சி பெறுகிறார்கள். ஏவுகணைகளை கொள்வனவு செய்யாத போதிலும் அவை ஏவுகணைகளைக் கொண்டிருக்க வசதியுடையவை இப் படகுகள் பீரங்கிகள் — இயந்திர துப்பாக்கிகளைக் கொண்டுள்ளன.

## இராணுவ வெறியருக்கு மரியாதை

சென்ற உலகப் போரின் போது, ஜெர்மனிய சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜி இயக்கத்தில் ஆர்தர் ருடால்ப் என்பவன் ஒரு முக்கிய புள்ளியாக இருந்தான். அப்போது நேச நாடுகள் மீது குண்டுகள் வீசுவதற்கு வி–2 என்ற ராக்கெட்டை தயாரிப்பதில் இவன்தான் முக்கிய உதவியாளனாக இருந்தான். இரண்டாம் உலகப்போர் முடிந்த பிறகு அமெரிக்காவுக்கு சென்றான். அப்போது அமெரிக்கா இவனை ஆரத்தி எடுத்து வரவேற்றது. அமெரிக்காவுக்காக சில விசேஷ விண்வெளி ராக்கெட்டுகளையும் பெர்ஷிங் போன்ற ஏவுகணைகளையும் தயாரித்து தருவதில் மிகவும் துணை புரிந்தான். எனவே, அவனுக்கு குடியுரிமை கொடுத்து பல விருதுகளை அமெரிக்க ஏகாதிபத்தியம் வழங்கியது.

இப்போது காரியம் முடிந்து விட்டதால் இவனை வெளியேற்றும் முயற்சியில்– அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈடுபட்டது. ஹிட்லரோடு சேர்ந்து பல்லாயிரம் பேரை இவன் கொன்றதாக குற்றம் சாட்டியது. எனவே தனக்குக் கொடுக்கப்பட்ட குடியுரிமையை வேண்டாம் என்று சொல்லிவிட்டு மேற்கு ஜெர்மனிக்கு சென்றான் ஆர்தர் ருடால்ப். இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரோடு இருந்தவன் என்பதால் இப்போதைய மேற்கு ஜெர்மன் அரசு இவனை ஆராத்தி எடுத்து வரவேற்றிருக்கிறது. இனி மேற்கு ஜெர்மனிக்கு யுத்தக் கருவிகளை செய்து தரப் போவதாக ஆர்தர் ருடால்ப் அறிவித்திருக்கிறான்.

## பிலிப்பைன்ஸ் படைத் தலைவர் சுடப்பட்டார்

கம்யூனிஸ்டு மற்றும் முஸ்லீம் தலைவர்கள் பலரை கைது செய்தும், கொலை செய்தும் செய்த வேலைக்காக பல விருதுகள் பெற்ற பிலிப்பைன்ஸ் நாட்டின் ராணுவ தளபதி பிரிகேட், ஜெனரல் கஸ்மான் தெற்கு ககாயன் டி ஓரோ நகரில் உள்ள இவருடைய தலைமை அலுவலகம் அருகில் 4 தீவிரவாதிகளால் சுடப்பட்டார். இதனுல் இவருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# சிங்களப் பேரினவாதத்தில் முஸ்லீம் மக்கள்

இலங்கையின் அரசுரிமை பிரித்தானிய ஏகாதிபத்திய அரசிடமிருந்து சிங்கள நிலப்பிரபுத்துவ வாதிகளின் கைகளுக்கு மாற்றப்பட்ட நாள் தொடங்கி பேரினவாத அரசின் இனவெறிக் கொடுமைகளுக்கு தமிழ்பேசுபவர்கள் என்பதால் பற்பல இன ஒடுக்குமுறை வடிவங்களை நாளும் சந்தித்துக் கொண்டிருப்பவர்களில் முஸ்லிம் மக்களும் அடங்குவர்.

தமிழ் பேசும் இனத்தின் மேல் தீராப்பகை கொண்டு இன ஒழிப்பு நடவடிக்கைகளில்—மும்மரமாக இறங்கியிருக்கும் இவ் இனவெறி ஸ்ரீலங்கா அரசு, தனது கொள்கையான இலங்கையை பௌத்த சிங்கள பூமியாக்குவதற்கு இடைஞ்சலாக உள்ள நிலைக்கு தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், முஸ்லிம் மக்கள் அரும்பாடுபட்டு வியர்வை சிந்தி, காடுவெட்டி திருத்தி அமைத்த புதுக் காணிகளை எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்காது அரசு சுவீகரித்து, அந்நிலங்களில் சிங்கள மக்களை குடியமர்த்துவதில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் பௌத்த மதத்தின் பெயரால் பாரம்பரிய முஸ்லிம் மக்களின் பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியமர்த்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

### ஆக்கிரமிப்பும்—போலிப் புதை பொருட்களும்

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 273 பௌத்த சின்னங்களை நடாத்தி முஸ்லிம் மக்களை பிரச்சனைக்குள் இழுத்து விட்டுக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா இனவெறி அரசு, முஸ்லிம் மக்களை கல்வி ரீதியிலும், தொழில் ரீதியிலும் புறக்கணித்து வருகிறது.

முஸ்லிம் மக்களுக்கென தனியான கட்சியோ—இயக்கமோ இவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்த இல்லாததால், இம் மக்கள் நம்பி வாழ்ந்து கொண்டிருந்த கொழும்பு முஸ்லிம் பூர்ஷுவா தலைவர்கள் இம்மக்களின் உயர்ந்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது தங்கள் சுய நலத்தையே கருத்தாகக் கொண்டு முஸ்லிம் மக்களின் ஏகோபித்த ஒடுக்குமுறைக்கு எதிரான குமுறலை அடக்குவதிலேயே முனைந்துள்ளது மிகவும் வேதனைக்குரியதாகும்.

அனைவரையுமே விட்டு வைக்க தயாரா இல்லாத நிலையே அரச பயங்கரவாதிகள் தமிழ் பேசுபவர்கள் என்பதால் முஸ்லிம் மக்கள் மேலும் காலத்திற்கு காலம் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது புலனாகிறது.

### ஸ்ரீலங்கா அரசின் ஆக்கிரமிப்பு

தேர்ந்தெடுக்கப்பட்ட சிங்கள காடையர்கள் ஆயுதபாணியாக்கப்பட்ட நிலையில் வடக்கு, கிழக்குப் பகுதியில் திட்டமிட்டு குடியேறியுள்ளதால், நாளும் பெரும் அவதி நிலைக்கு இக்காடையர்களால் உள்ளாக்கப்படுவோரில் முஸ்லிம் மக்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றனர்.

இக் காடையர்களினால் நாளும் மேற்கொள்ளப்படும் கொள்ளைகள் ஏராளம். அடிக்கடி முஸ்லிம் கிராமங்களுக்குள்ளும் புகுந்து இக்காடையர்கள் தங்கள் கைவரிசையை காட்டிச் செல்வதினால் முஸ்லிம் மக்களும் விரக்தியின்

களை புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளதாகவும், அதை புனரமைத்து பாதுகாப்பு கொடுப்பதற்காக பௌத்த குருமாரும் சிங்கள மக்களும் விரைவில் வடக்கு, கிழக்கு பகுதியில் குடியமர்த்தப் படுவார்கள் என இவ் இனவெறி அரசு அறிவித்துள்ளது. இதனால், முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களிலும் சிங்கள குடியேற்றங்கள் நிகழ்த்துவதால், முஸ்லிம் மக்களின் பெருமளவு காணிகளை பறித்து விடுவதற்கான திட்டத்துடன் அரசு செயல்பட்டு வருகிறது அப்பட்டமாக தெரிகின்றது.

ஏற்கனவே தேவாபிய—சேருவில தொகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்களை நடாத்தி காலத்துக்கு காலம் ஸ்ரீலங்கா இனவெறி அரசு முஸ்லிம் மக்களின் காணியை பறித்து வருவதும் தெரிந்ததே.

அரசியல் சட்டப்படி நிருவாக மொழியாக தமிழில் அலுவல்கள் நடாத்த வேண்டிய இடத்தில், சட்டத்தை மதிக்காது தமிழ் மொழியிலன்றி சிங்கள மொழியிலேயே நிர்வாக அலுவல்

நாளும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனை பெரும் சிக்கலாக உருவெடுத்து, பேச்சு வார்த்தைகள், கூட்டங்கள், சத்தியாக்கிரக போராட்டங்கள் எதுவுமே பலனளிக்காது மக்கள் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

### முஸ்லிம் மக்களின் பங்கு

சிந்தனை சிறைக்குள் கட்டுண்டிருந்த தமிழ் பேசும் மக்கள் விழிப்படைந்த நிலையில், ஒடுக்குமுறைக்கு எதிரான ஒட்டு மொத்தப் போராட்டத்திற்கு தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழ் பேசும் மக்களின் இறைமையையும், சுதந்திரத்தையும் பெற்றுக் கொள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு முஸ்லிம் மக்கள் தங்கள் பங்களிப்பை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தமிழ் ஈழ விடுதலையை நிதர்சனமாக்க, முஸ்லிம் மக்களே!

தமிழ் ஈழப் போராட்டத்திற்கு உங்கள் பங்களிப்பை வழங்குங்கள்.

# இரும்பு நங்கையும், சிறிலங்கா விஜயமாம்.

ஸ்ரீலங்கா நவபாஸிஸ அரசின் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி பிரிட்டனிடம் ஆயுத உதவிகோரி பிச்சைப் பாத்திரத்துடன் சென்றதையும், பிரிட்டன் நேரடியாக ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுதம் வழங்க மறுத்ததிற்கான காரணங்களை எழுச்சி குரல்—5ல் பார்த்தோம். ஆனால் கள்ளத்தனமாக தனியார் துறை மூலம் பல கோடி ருபா பெறுமதியான நாசகார ஆயுதங்களை பிரிட்டன் ஏகாதிபத்திய அரசு, ஸ்ரீலங்கா தரகு—முதலாளித்துவ அரசுக்கு வழங்கி வருகிறது. (ஏனெனில் பிரிட்டனின் பொருளாதாரப் பொறிவின் காரணமாக கள்ளத்தனமாக ஆயுதம் விற்க வேண்டிய நிலை) இருந்த போதும் திருப்தி அடையாத ஸ்ரீலங்கா நிலப்பிரபுத்துவ அரசிற்கு சமாதானம் கூறுவதற்காக சர்வாதிகாரி தாட்சர் ஸ்ரீலங்காவுக்கு விஜயம் செய்ய உள்ளாராம்.

தொடர்ச்சியாக இலங்கையில் காலனித்துவ, நவ—காலனித்துவ சுரண்டலை மேற்கொள்ளும் பிரிட்டன், தமது தரகு முதலாளிகளுக்கு சமாதானம் கூறவேண்டிய தேவை இருக்கத்தான் செய்கிறது. ஐரிஸ் விடுதலைப் போராட்டத்தை மிருக பலம் கொண்டு ஒடுக்கி வரும் தாட்சருக்கு இன்று பிரிட்டனில் நடைபெறும் வேலை நிறுத்தப் போராட்டங்களையோ அல்லது தாட்சருக்கு எதிராக—ஏகாதிபத்திய, முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக கிளர்ந்தெழும் மக்களையோ ஒடுக்க முடியவில்லை. இவர் கல்விகற்ற பல்கலைக்கழகமே இவருக்கு டாக்டர் பட்டம் வழங்க மறுத்துவிட்டது. இதை ஆதரித்து பல மகிழ்ச்சி ஊர்வலங்களும், ஆர்ப்பாட்டங்களும் பிரிட்டனில் நிகழ்ந்துள்ளன. இது போதாதென்று அதி உத்தமர் ஜெ.ஆர். ஜெயவர்த்தனாவை சந்திக்க வருகிறாராம்.

பிரிட்டிஷ் பிரதமர் தாட்சரின் ஸ்ரீலங்கா விஜயத்தை கைவிடக்கோரி இவரின் இல்லம் முன்பாக தமிழ் ஈழ ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினார்கள். பெண்கள் பேரணி ஒன்றும் நடைபெற்றது.

ஆனால் இவை எல்லாம் தாட்சரின் காதுகளுக்கு எட்டப்போவதில்லை. ஆனால், பிரிட்டனில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களை இந்த பேரணி சிந்திக்க வைக்கத்தான் போகிறது. அவர்கள் தமிழ் ஈழ மக்களுக்கு ஆதரவாக செயல்படத்தான் போகிறார்கள். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

# நிதியின் தாக்கம் புரட்சிப்பாதையில்...

உலகளாவிய ரீதியில் விழித்தெழுந்துள்ள, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதற்காக பரேதப் பிரயத்தனத்தை எடுத்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டு வருகின்றது.

ஏகாதிபத்தியத்தின் அடிவருடியான ஜே.ஆர். மிதமிஞ்சிய உதவிகளாக மனித நேயம் மதிக்காத நாடுகளிடமிருந்தெல்லாம் யுக்திகளையும், நவீன போர்த் தளபாடங்களையும் பெற்று, மிகத் திமிரில் உலாவிக் கொண்டு, தமிழ் பேசும் மக்களுக்கெதிராகப் போரையே தொடுத்துள்ளார்.

இவரின் திமிர்ப் பேச்சுக்கள் இந்தியாவையே வலிய சண்டைக்கு இழுக்கும் பாணியிலே அமைந்துள்ளது. இவ் அரச இராணுவ வெறியர்களின் கொட்டம் தமிழீழத்தில் மட்டுமல்ல இந்திய மீனவர்கள் மேலும் நடத்தப்படுவதை நோக்கும் போது, வலிய சண்டைக்கு இந்தியாவை இழுத்து விடுவதை கருத்திற் கொண்டு செயற்படுவது தெரிகின்றது.

ஏகாதிபத்தியத்தின் கைப்பாவையான ஜே.ஆர். ஏகாதிபத்திய எஜமானின் திட்டமான யுத்தத் தயாரிப்புக்கு துணை போய் இந்து சமுத்திரப் பிராந்தியத்தை ஒரு போர்ப் பிரதேசமாகவே மாற்றிவிடுவதில் தீவிரமாக செயற்படுகிறார் என்பதே உண்மை.

இன்று, சர்வதேச ரீதியாக தாக்கங்களை ஏற்படுத்தி வரும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உலக ஏகாதிபத்தியத்தின் வலிமையை உடைத்து விட முழு நோக்காகச் செயற்படும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தன்னை மேலும், புரட்சிப் பாதையில் தடையில்லாமல் முன்னேற நிதியுதவி மிகவும் அவசியமாகும்.

ஆகவே, தமிழ் ஈழ விடுதலையை நிதர்சனமாக்க நிதியுதவி அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி

K. ANANDAN, A/c 11506
INDIAN OVERSEAS BANK
BRANCH - VIRUGAMBAKKAM
MADRAS - 600 092.
(S.INDIA)

# MUST

## தமிழர் நல மருத்துவ அமைப்பு

தமிழர் நல மருத்துவ அமைப்பானது பல தமிழ் ஈழ விடுதலை அமைப்புக்களின் ஆதரவுடனும், தமிழ் மக்களின் விடுதலையில் ஆர்வம் உள்ளவர்களினதும் ஆதரவுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பானது தமிழ் ஈழ மக்களின் பொதுவான மருத்துவ அமைப்பாக செயற்படும்.

தமிழ் ஈழத்தில் உள்ள அகதி முகாம்கள் கவனிப்பாரற்று தொற்று நோய்கள் பரவியுள்ளன. சிறிலங்கா இனவெறி அரசு தமிழ் மக்களுக்கு மருந்துப் பொருட்கள் அனுப்புவதை நிறுத்தியுள்ளது. இவர்களின் வெறியாட்டத்தால் துப்பாக்கித் சூட்டுக் காயங்களுடனும், எரி காயங்களுடனும் அகதிகளாக தமிழ் நாட்டுக்குத் தப்பி வருகிறார்கள்.

இந்நிலையில், தமிழ் பேசும் மக்களுக்கு மருத்துவ சேவை செய்யும் பொருட்டு தமிழர் நல மருத்துவ அமைப்பு உருவானது, இன்னலுறும் ஈழ மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். இது போன்ற சமூக சேவை அமைப்புக்கள் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். இவ் அமைப்பானது பாரிய அளவில் தமிழ் மக்களிடமிருந்தும், தமிழ் ஈழ விடுதலையில் மிகவும் ஆர்வம் உள்ளவர்களிடமிருந்தும் மருத்துவப் பொருட்களை சேகரித்து வருகின்றது.

இவ் மருத்துவ அமைப்பிற்கு தாராளமாக உதவுவதன் மூலம் தமிழ் ஈழ மக்களுக்கும், விடுதலைப் போராளிகளுக்கும் உதவுமாறு மனிதாபிமானமுள்ள அனைவரையும் வேண்டுகின்றோம். உதவி செய்ய விரும்புவோர் கீழ்க் கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்க.

MUST'
C. D. 375,
I. O. B., Mahalingapuram Branch,
Nungambakkam, Madras-600 034.
South India.

144, சூளைமேடு நெடுஞ்சாலை,
சூளைமேடு,
சென்னை — 600 094.

# பாலஸ்தீன விடுதலை இயக்கமும்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், சியோனிசத்தினதும், அராபிய தேசிய முதலாளித்துவத்தினதும் தொடர்ச்சியான ஒடுக்கு முறைகளுக்கு மத்தியில் தாம் இழந்த மண்ணையும், தேசிய அந்தஸ்தையும் மீளப் பெற விட்டுக் கொடுக்காது போராடி வரும் பாலஸ்தீன மக்கள் தமது போராட்டத்தை பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ) என்ற ஸ்தாபனத்தினூடாக முன்னெடுத்துச் செல்கின்றனர்.

### சியோனிஸத்தின் வேட்டையாடல்

நாற்பதே நாட்களுக்குள் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும், பாலஸ்தீன மக்களையும் உருத்தெரியாமல் அழித்து விட முடிவு செய்த சியோனிச இஸ்ரேல் 1982 செப்டம்பரில் அவர்கள் மீது பலாத்காரமாகப் போர் தொடுத்தது.

அதி நவீன எஃப்-6 போர் விமானங்களும், டாங்கிகளும், நவீன இயந்திரத் துப்பாக்கிகளும் கொண்டு ஆதிக்க வெறி பிடித்த இஸ்ரேல் தெற்கு லெபனானில் பாலஸ்தீனர்கள் வாழ்ந்த பகுதிகளில் தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும், ஊடுருவி பலத்த சேதங்களை ஏற்படுத்தினர்.

இஸ்ரேலியரின் போர்ப் பிரகடனத்தை எதிர்த்து சர்வதேச ஒடுக்கப்பட்ட சமூகம் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு நல்கியது. நாற்பதே நாட்களில் தமது இலக்கை எய்து விடத் துடித்த இஸ்ரேலினதும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் எதிர்பார்ப்புக்கள் பிழைக்கத் தொடங்கின.

வாழ்வுக்கும், சாவுக்கும் இடையில் ஊசலாடிய ஒடுக்கப்பட்ட பாலஸ்தீன மக்கள் வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்தினர். இப்போரின் முடிவில் தெற்கு லெபனானில் இருந்த தமது வீரர்களை லெபனானை விட்டு வெளியேற்ற வேண்டிய இக்கட்டான நிலைக்கு யசீர் அரபாத்தில் தலைமையிலான பாலஸ்தீன விடுதலை இயக்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

ஜோர்டான், துனிசியா, யேமன், சிரியா உட்பட பல அராபிய நாடுகளுக்கு அராபியர்கள் சிதறிச் செல்ல வேண்டிய இழிவுநிலை ஏற்பட்டது.

# சந்தர்ப்பவாதக் கும்பல்களின் துரோகமும்

### சந்தர்ப்பவாத கும்பல்களின் துரோகம்

இந்த நிலையில் தமது ஸ்தாபனமான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை மீளக் கட்டியெழுப்பும் பாரியபணி ஒவ்வொரு பாலஸ்தீனியன் மேலும் சுமக்கப்பட்டது.

இப்பணியை செவ்வனே செய்யும் பாரிய பொறுப்பில் நின்று விலகி சந்தர்ப்பவாதப் போக்கை மேற்கொண்ட அபுமுசா, அபுசாலே கும்பலினர் யசீர் அரூபாத்தின் தலைமை தோற்கடிக்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பினர்.

இவர்களது கோரிக்கை வலுப்பெறாமல் போகவே ஆயுதம் தாங்கிய எதிர்ப் புரட்சி நடவடிக்கையில் அபுமுசா, அபுசாலே கும்பலினர் ஈடுபடத் தொடங்கினர்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலே அவர்களது செய்கை அமைந்தது. இஸ்ரேலியரின் போர் வெறியினால் ஏற்கனவே அமைப்பு ரீதியாக பாதிக்கப்பட்டிருந்த பாலஸ்தீன விடுதலை இயக்கம் அபுமுசா, அபுசாலே கும்பலினரின் சந்தர்ப்பவாதப் போக்கினால் மேலும் நெருக்கடிக்குள்ளானது.

முதலாளித்துவ ஊது குழல்களும், சந்தர்ப்பவாதிகளும், யசீர் அரபாத்தின் தலைக்கு ஆபத்து வந்து விட்டதாகவும், பாலஸ்தீன விடுதலை இயக்கம் பாலஸ்தீன மக்களின் முழுமையான அங்கிகாரம் பெற்ற ஸ்தாபனம் இல்லையெனவும் பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர்.



P.L.O. தலைவர் - ஜஸீர் அரபாத்

இவ்வாறாக சடத்துவ ரீதியிலும், உளவியல் ரீதியிலும் பாரிய பாதிப்புக்குள்ளான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை மீளக் கட்டியெழுப்பும் பணி பி.எல்ஓ.வின் மத்தியக் குழுவின் மீதும் விழுந்தது.

### எதிர்ப்புரட்சியாளரின் முயற்சிகள் தோல்வி

ஏகாதிபத்திய சூழ்ச்சிகளையும், ஒடுக்கு முறைகளையும் தசாப்தங்களாக சந்தித்து விடுதலை இயக்கமானது தமது வரலாற்றுப் பணியைக் கண்டு பயமோ, பதற்றமோ அடையவில்லை.

யதார்த்த பூர்வமாக அராபியாவின் ஒடுக்கப்பட்ட மக்களுடனும், முற்போக்கு சக்திகளுடனும், தொழிலாளர் வர்க்கக் கட்சிகளுடனும் தமது ஐக்கியத்தை இறுக்கிக் கொண்டனர்.

நவம்பர் 22ம் திகதி 1984ல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அதி உயர்ந்த முடிவெடுக்கும் அமைப்பான பாலஸ்தீன தேசிய சபையின் 17வது கூட்டத் தொடர் ''யோர்டான்'' நாட்டின் ''அம்மான்'' நகரில் தொடங்கியது.

நவம்பர் 22ம் திகதி பாலஸ்தீன தேசிய சபைக்கு உரை நிகழ்த்திய புரட்சியாளன் யசீர் அரபாத் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானமான 242வது தீர்மானத்தை பாலஸ்தீன மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையெனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

பாலஸ்தீன மக்கள் தமது சொந்தப் தாயகத்திற்கு திரும்பவும், தமது சுயநிர்ணய உரிமையை தாமே தீர்மானிக்கவும், சுயாதீனமாக பாலஸ்தீன அரசை உருவாக்கவும் குறுக்கீடாகவுள்ள ஐ.நா.பாதுகாப்புச் சபையின் 242வது தீர்மானத்தை நிராகரித்த அறிக்கையொன்று நவம்பர் 29ல் பாலஸ்தீன தேசிய சபை(பிஎன்சி)யினால் வெளியிடப்பட்டது.

இஸ்ரேலுக்கும், எகிப்திற்கும் இடையிலான காம்ப்டேவிட் உடன்படிக்கையை நிராகரித்த மேற்குறிப்பிட்ட அறிக்கை 1982ல் றேகன் முன் வைத்த சமாதான உடன்படிக்கையையும் நிராகரித்தது. ஏகாதிபத்தியக் குள்ள நரிக்காரர்களின் போலிச் சமாதான உடன்படிக்கைகளை நிராகரித்த பாலஸ்தீன தேசிய சபை மீண்டும் தமது தலைவராக புரட்சியாளன் யசீர் அரபாத்தே செயற்பட வேண்டும் என்பதையும் முடிவு செய்தது. (யசீர் அரபாத் தனது தலைமைப் பதவியை ராஜினாமா செய்ய சித்தமாகவுள்ளார் என நவம்பர் 22ல் அறிவித்திருந்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது).

### புரட்சிகர ஸ்தாபனம்

ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனம் தமது தேசிய அந்தஸ்தை மீட்டெடுக்கவும், சமூக, அரசியல், பொருளியல் சுதந்திரத்தை வென்றெடுக்கவும் ஒடுக்குமுறையாளர்களுக்கெதிராகப் போராட வேண்டிய கால கட்டத்தில் அத் தேசிய இனத்தின் போராட்டத்தை செவ்வனே முன்னெடுப்பது அத் தேசிய இனத்தின் மத்தியில் உருக்கொள்ளும் புரட்சிகர ஸ்தாபனமேயாகும்.

**V. மகாதேவா**

# இயக்கங்கள் மேலும் இணைகின்றன...

( 1ம் பக்கத் தொடர்ச்சி)

தேசபிதா தங்கத்துரை அவர்களின் பெரும் இலட்சியமாக இருந்தது.

ஒருபுறம் ஒற்றுமைக்கான முயற்சிகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தாலும், மற்றொருபுறம் கருத்து வேறுபாடுகளும், பகைமை உணர்வுகம் இவ் ஒன்றிணையா இயக்கங்களிடையே மேலோங்கிக் கொண்டிருந்தன.

மேலும் தொடர்ந்த நிகழ்வுகளால் இவ் இயக்கங்கள் இனிமேல் ஒன்றிணைவது சாத்தியமாகாதோ என்ற ஐயப்பாடே மக்கள் மத்தியில் வலுக் கொண்டிருந்தது.

ஸ்ரீலங்கா இனவாத அரசு சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து பெருமளவு ஆயுத உதவிகளையும், ஆலோசனைகளையும் பெற்று தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கும் தனது வேலையில் மேலும் மேலும் மூர்க்கமாக ஈடுபட்டு வருகிறது.

நாள் தோறும் பெரும் எண்ணிக்கையில் தமிழீழ மக்கள் கொல்லப்படுவதும், எங்கேயென்று தெரியாத சிறைக் கூடங்களுக்குக் கொண்டு சென்று சித்திரவதை செய்யப்படுவதும், மானபங்கப்படுத்தப்படுவதும், அகதிகளாக விரட்டியடிக்கப்படுவதும் என்று இன்னோரன்ன அவலங்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன.

இந்நிலையில் இயக்கங்கள் ஒன்றிணைவது என்பது கால நிர்ப்பந்தம் ஆகிறது. இதற்கு முந்தைய 'எழுச்சி' இதழின் விடுதலைக்குரல் பகுதியில் இயக்கங்களின் ஒற்றுமையை வலியுறுத்தி ஒரு கட்டுரையை வெளியிட்டு அக்கட்டுரையில்,

''எமது மக்களைப் பேரழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு இயக்கங்கள் தமக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை மூட்டை கட்டி வைத்து விட்டு இராணுவ ரீதியிலாவது ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமென்பதே எல்லா இயக்கங்களுக்கும் நாம் விடுக்கும் வேண்டுகோள் ஆகும்.

இயக்கங்கள் ஒன்றிணைவது என்று நாம் சொல்லும் போது இப்போதைக்கு நடைமுறையிற் சாத்தியப் படாதது என்று தோன்றும் விவகாரங்களைப் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. இயக்கங்கள் ஒன்றிணைவது என்றால் அவை தத்தமது தனித்துவத்தை இழந்து சங்கமமாக வேண்டுமென்பது அல்ல. இராணுவ ரீதியில் இயக்கங்கள் ஒருங்கிணைந்து பங்காற்றுவதே இன்றைய அவசரத் தேவை.

ஒரு நாளில் ஒரு இயக்கம் மட்டும் இராணுவ நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதும் பிறிதொரு நாளிலே பிறிதொரு இயக்கம் பிறிதொரு இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதும், இன்னோர் நாளில் மற்றும் இன்னோர் இயக்கம் ஈடுபடுவதும் என்றிருக்காமல் இராணுவ நடவடிக்கைகளில் எல்லா இயக்கங்களும் ஒருங்கிணைந்து ஈடுபட்டால் எமது எதிரிகளை மேலும் பெரிய அளவில் நிலைகுலைந்து போகச் செய்வதும், நேச சக்திகளின் ஆதரவை மேலும் விரைவாகப் பெற்று போராட்டத்தை வலுப்படுத்தித் தமிழ் ஈழத்தை மிக விரைவில் மீட்டெடுக்கவும் இது வழியமைத்துத் தரும் என்பது உறுதி.

எமது மக்கள் பால் உண்மையான அன்பும் பரிந்துணர்வும் இருக்கின்ற இயக்கங்கள் எல்லாம், பல்வேறு கருத்து வேறுபாடுகளையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு எமது மக்களைப் பேரழிவில் இருந்து காப்பாற்றும் ஒரே நோக்கத்திற்காக இன்றைய அவசரத் தேவையும் அவசியத் தேவையுமான ''இராணுவ ரீதியில் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்'' என்ற எமது இந்த வேண்டுகோளைச் செவிமடுத்து செயலாற்ற முன் வரும் என்று உறுதியாக நம்புகிறோம்'' என்றெல்லாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எமது தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தின் இக்கருத்துக்கள் மேற்படி 'எழுச்சி' இதழில் மாத்திரமன்றி, பிற பத்திரிகைகளுக்கு அவர் அளித்த பேட்டிகள் எல்லாவற்றிலும் கூட இடம் பெற்றிருந்தன.

தமிழீழ மக்களின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தன்னலம் மறுத்துக் காரிய மாற்றும் தியாக உள்ளம் கொண்டோர். பலரும் சேர்ந்து முழுமூச்சாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட முயற்சிகள் அனைத்தினது ஒரு விளைவாக திரு. ஸ்ரீசபாரத்தினம் தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO)

திரு. பாலகுமாரர் தலைமையில் இயங்கும் ஈழப் புரட்சி அமைப்பு (EROS)

திரு. பத்மநாபா தலைமையில் இயங்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகிய மூன்று இயக்கங்களின் கூட்டமைப்புடன் திரு. பிரபாகரன் தலைமையில் இயங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கமும், ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் இயங்க இருப்பதால், ஒரு பொது வேலைத் திட்டத்திற்காக ஒன்றிணைந்து இயங்கும் இயக்கங்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து நாலாகிறது என்பதை மகிழ்ச்சியுடனும், பெருத்த நம்பிக்கைகளுடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

''எங்கள் பகைவா ஏங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே'' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் இலட்சியக் கனவை நம் தமிழீழத் தமிழர்கள் நனவாக்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மற்றொரு பிரதான இயக்கமாகிய திரு. உமா மகேசுவரன் தலைமையில் இயங்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமாகிய PLOT உடனும் ஒருங்கிணைவதை நோக்காகக் கொண்டு அதற்கான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

இவ்வாறு தமிழீழ மக்களின் விடுதலைக்காகப் போராடும் விடுதலை இயக்கங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து — ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' என்கின்ற முதுமொழிக்கேற்ப தமிழீழ மக்களுக்குப் பாதுகாப்பான — நல்வாழ்வை அமைக்க முன்வரவேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

www.padippakam.com



# இன ஒழிப்பு நடவடிக்கைக்குப் புதிய அத்திவாரம்

## J. R. இன் பாகிஸ்தான் விஜயம்

தமிழ் ஈழ மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு, தங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில், உறுதியாக செய்ல்ப்பட்டு வருகின்றனர்.

தமிழ் பேசும் மக்களின் இந் நியாயமான, சிங்கள பேரினவாதிகளின் ஒடுக்குமுறைக் கெதிரான, போராட்டத்தின் தன்மையை மனித நேயம் மதிக்கும் நாடுகள், நன்றாகவே புரிந்து கொண்டு ஆதர்வு நல்கி வருகின்றனர்.

முற்றிவரும் பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாமல், தனது அரசைத் திடப்படுத்திக் கொள்ள இனங்களிடையே பகைமையைத் தூண்டிவிட்டு, அரசியல் கூதல் காய்ந்துக் கொண்டிருக்கும், தரகு முதலாளித்துவ அரசு கூர்மையடைந்து வரும் தமிழ் ஈழப் போராட்டத்தை நசுக்கும் முயற்சியாக பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் தமிழ் இனப் படுகொலைகளை நடத்திக் கொண்டிருக்கிறது.

ஏகாதிபத்தியத்தின் நவ காலனித்துவப் பிடிக்குள் முற்றாக அகப்பட்டு, சுரண்டல் வீத அதிகரிப்பினால் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு என, பல நவீன கர ஆயுதங்களை வாங்கிக் குவித்துக் கொண்டிருப்பதாலும், பாரிய வீழ்ச்சியை அடைந்து கொண்டிருக்கும் இலங்கையில் பொருளாதாரத்தை தடுத்து நிறுத்த முடியாமல், ஏகாதிபத்தியத்திடம் தன்னை முழுமையாக ஒப்படைத்து, ஏகாதிபத்திய எஜமானின் ஆக்ஞையின் பேரில் தனது ஒவ்வொரு செயற்பாடுகளையும் செய்து கொண்டிருக்கும் ஜெ.ஆரின் அரசு, ஏகாதிபத்தியத்தின் கைக் கூலிகளுடன் தனது உறவை வளர்த்துக் கொள்வதில் மிகவும் தீவிரமாகியுள்ளார்.

அண்மையில் ஸ்ரீ லங்காவுக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகாரத்துறை செயலாளர் ரொமேஷ் பண்டாரி, அரசு மந்திரிகளுடனும் எதிர்க்கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தியமை தெரிந்ததே.

இலங்கையின் இனப் பிரச்சனை தொடர்ந்து கொண்டிருப்பதும், இலங்கையில் ஏகாதிபத்தியத்தின் சுரண்டல்கள் வலுப் பெறுவதும் இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்தை சமாதானப் பிராந்தியமாக மாற்றுவதற்காக அரும் பெரும் முயற்சிகளை எடுத்துச் செயல்படும் இந்திய அரசுக்கு மிகுந்த கவலையை அளித்துள்ளது எனில் மிகையாகாது.

இந்நிலையில், இலங்கையில் தொடரும் இனப் பிரச்சனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர இந்திய அரசு முனைந்து நின்று செயல்ப்படுவதென்பது தவிர்க்க முடியாததாகையால், முன்பு தனது தூதுவராக பார்த்தசாரதியை அனுப்பிய போதும் பேச்சு வார்த்தைகள் திருப்தி அளிக்கவில்லை. மாறாக, ஸ்ரீ லங்கா அரசு தனது பேச்சு வார்த்தைகளை வழமையாக நடத்திக் கொண்டே, ஆயுதக் குவிப்பு வேலைகளையும், இன ஒழிப்பு வேலைகளையும் நடத்திக் கொண்டே இருக்கின்றது.

இன்று இந்திய வெளிவிவகாரத் துறை செயலாளர் ரொமேஷ் பண்டாரியின் விஜயத்தின் பின்னர் விட்ட அறிக்கையில், வன்முறை நிற்பது அவசியம். பேச்சு வார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வு காண வேண்டியது அவசியம் என கூறிவிட்டு சூட்டோடு சூட்டாகவே, ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியாக செயல்ப்பட்டுக் கொண்டிருக்கும், பாகிஸ்தானுக்குள் நுழைந்து விட்டான் பாசிஸ வெறியன் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா.

பாகிஸ்தானிய மக்களை இராணுவப் பிடிக்குள் நெருக்கிக் கொண்டு, ஏகாதிபத்திய எஜமானின் ஆணைப்படி இந்தியாவைச் சீர்குலைக்க முன் நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கும், பாகிஸ்தானிய அதிபர் ஜியா—வுல்—கக்குடன் கரமிணைத்துள்ளார். அங்கு சென்ற ஜெ.ஆர். ஜெயவர்த்தனா, இலங்கையில் நடப்பது இனப் பிரச்சனை அல்ல. தமிழ்த் தீவிரவாதிகளை ஒடுக்கியே தீருவேன் எனக்கூறி உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவப் பார்க்கிறார்.

வன்முறையை தடுப்பது அவசியம் என இலங்கையில் கூறிவிட்டு, உடனடியாகவே வன்முறையை மேலும் விரிவுபடுத்த பாகிஸ்தானின் உதவியை நாடிக் கொண்டிருக்கின்றார் இவ் தரகு — முதலாளித்துவ அரசின் இந்த செயல்பாடுகளை நோக்கும் போது, தமிழ் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என புலம்புவது உலக நாடுகளை ஏமாற்றவே என்பது புலனாகிறது. திட்டமிட்டு இலங்கையை பௌத்த சிங்கள நாடாக மாற்றுவதே முழு நோக்கம் என்பது வெட்ட வெளிச்சமாகின்றது.

தமிழ் இனப்படு கொலையை நிகழ்த்தி, இலங்கையில் உள்ள தமிழினத்தை முற்றாக அழிப்பது தான், இவ் இனவெறி அரசின் நோக்கம்.

ஸ்ரீ லங்கா தரகு — முதலாளித்துவ அரசு கரமிணைத்துள்ள சர்வதேச பயங்கரவாதிகளுக்கு இனப்படுகொலைகள் நிகழ்த்துவதென்பது சர்வ சாதாரண நிகழ்ச்சியாகும்.

தமிழ் ஈழ மக்களின் போராட்ட உணர்மைக்கும், போராட்ட வேகத்திற்கும் ஈடு கொடுக்க முடியாமல், அல்லாடிக் கொண்டிருக்கும் இவ் இனவெறி அரசு, சர்வதேச பயங்கரவாதிகளின் கூட்டினால், தன்னை மெருகேற்றிக் கொள்ளப் பார்க்கிறது.

ஒன்றுபட்ட மக்கள் சக்தி முன் இப்பயங்கரவாதிகளின் கூட்டுக்கள் நிலைத்து நிற்கப் போவதில்லை.

தமிழ் ஈழமே தமக்கான ஒரே தீர்வாகக் கொண்டு செயல்படும் தமிழ் ஈழ மக்களால் இக்கூட்டுகளின் எதிர்ப்புரட்சி சக்திகளெல்லாம் நிச்சயம் முறியடிக்கப் படுவது திண்ணம்.

# J. R. இன் அரசியற் தீர்வுகள்

## வெறும் இடைக்காலத் தீர்வுகளே

இன்று இலங்கையில், தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சனையானது, சர்வதேச மட்டத்திற்கு தரமுயர்ந்துள்ளது. பெரும்பாலானவர்கள் இனப்பிரச்சனை பற்றிய முடியான தீர்புகளை நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தையும் பல நாடுகள் ஸ்ரீ லங்கா அரசுக்கு வற்புறுத்திக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீ லங்கா நவ பாஸிஸ அரசானது தனது இனவாதக் கருத்துக்களை நாளும் சிங்கள மக்களிடையே தூவி விட்டு, சிங்கள மக்களை தமிழ் பேசும் மக்களுக்கெதிராக திசை திருப்பி விட்டதுடன், திட்டமிட்ட தனது செயல்பாடுகள் மூலம் நாளும் தமிழ் பேசும் மக்களை படுகுழிக்குள் தள்ளி விட்டுக் கொண்டு, உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவும் முயற்சியாக இனப் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காண்பதே நமது நோக்கம் என அரச ஊது குழல்களும், இன வெறி அரசியல் வாதிகளும் கூக்குரலிட்டுக் கொள்வதுடன், இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு கண்டாகி விட்டதாகவும் புலம்புவதில் அதி கெட்டிக்காரர்களாகி விட்டனர்.

ஒரு பக்கம் வன்முறை, ஒரு பக்கம் சமாதானம் என இரட்டை வேடம் போடும், சிறீலங்கா அரசின் தன்மைகள், இன்று வெளி உலகிற்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் தனது பிரித்தாளும் சூழ்ச்சியை நடைமுறைப்படுத்தி, சிங்கள — தமிழ் மக்களை பல காலமாகத் தூண்டி விட்டு, தனது அரசை நிலை நிறுத்திக் கொண்டு வந்த ஸ்ரீ லங்கா தரகு — முதலாளித்துவ அரசுக்கு இன்று இனப்பிரச்சனை விஸ்வரூபம் எடுத்த நிலையிலும், தமிழ் பேசும் மக்கள் தமது ஜீவ மரணப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் வேளையிலும், தங்கள் சுயநலம் கருதி, தமிழ் பேசும் மக்களின் போராட்டங்களை நசுக்க, தமிழ் இனத்தினரிடேயும் சில புல்லுருவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இனப் பிரச்சனைகளையும், இன ஒழிப்பு நடவடிக்கைகளையும், மூடி மறைத்து வெளி உலகை ஏமாற்ற பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கும் இனவெறி அரசுக்கு இப் புல்லுருவிகளின் உதவிகள் சிறிது கை கொடுக்கின்றன எனலாம்.

அக் காலம் தொட்டு, தமிழ் இனப் பிரச்சனைக்கு தமிழ் பூர்ஷுவா தலைமைகள் பல தடவைகள் ஸ்ரீ லங்கா அரசுகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தியும், பல ஒப்பந்தங்கள் கைச் சாத்திட்டும், எல்லாமே சிங்கள பேரினவாதத்திற்கு முன்னால், புஸ்வாணமாகியதே அன்றி நிதர்சனமாகவில்லை.

அன்று பண்டா—செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பொழுது அதை மூர்க்கத்தனமாக எதிர்த்து கண்டிப்பாதை யூத்திரை செய்தும், இன வெறிப் பௌத்த குருமாரினதும், பலவந்த எதிர்ப்புகளினால், ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டமை தமிழ் பேசும் மக்கள் அறியாததல்ல.

பேச்சு வார்த்தைகள், ஒப்பந்தங்கள் யாவுமே பயனற்றுப் போய், தமிழ்த் தலைவர்கள் எடுத்த அகிம்சைப் போராட்டங்களும் பயனற்றுப் போய்விட்டதையும், இனப்பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வர பேச்சு வார்த்தைகள் தீர்வைத் தராது ஆயுதப் போராட்டம் மூலம் விடுதலையை நாமே வலிந்து பெற்றுக் கொள்வதே உகந்தது என்பதில் தமிழ் ஈழ மக்கள் உறுதி கொண்டுள்ளனர்.

இந்நிலைமையிலும், தமிழ் பேசும் மக்களால் நிராகரித்து விடப்பட்ட வழி வந்த தமிழ்த் தலைமைகள், தாங்களே தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் என பறை சாற்றிக் கொண்டு, தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டு, வெளி நாடெங்கும் பிதற்றிக் கொண்டும் திரிகின்றனர்.

இத்தலைமைகள், தங்களின் பழமைவாதக் கருத்துக்களையும், அவர்களின் குழப்பான மூளைகளால் உதித்தெழும், எழுந்தமான சிந்தனைகளுக்கும் வடிவம் கொடுத்து, தமிழ் ஈழ மக்களை இன்னமும் ஏமாற்ற முனைந்து கொண்டு வருகின்றனர்.

அன்று பண்டா — செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட முக்கிய கர்த்தாவாக இருந்த பாசிஸ வெறியன் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா, காலாவதியாகிப் போன மாவட்ட அபிவிருத்தி சபையினால் தமிழ் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக கூட்டப்பட்ட வட்ட மேசை மகாநாடு, பல மாதங்களாக இழுத்தடிக்கப்பட்டு, நடந்தது தான் மிச்சம்.

இறுதியில், தீவிரவாதிகள் ஆயுதத்தை கீழே போடாது

(12ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்காவின் இராணுவ ஆதிக்கம்

உலக ஏகாதிபத்திய நாடாக திகழ்ந்து கொண்டிருக்கும் அமெரிக்கா, உலக நாடுகளை தனது ஆதிக்கத்துள் கொண்டு வர பல முயற்சிகளையும் தீவிரமாக எடுத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

விழிப்படைந்து, போராட்டங்கள் மேற்கொண்டு வரும் எழுச்சி மிக்க மக்கள் சக்தியின் முன் சிதறப் போகும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியாகவும், தனது உலக ஆதிக்க நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், சோவியத் யூனியனுடனான அதற்குள்ள மோதலிலிருந்தும் தன்னை திடப்படுத்திக் கொள்ள தனது ஆயுத பலத்தின் மூலம் தீர்வு காணலாம் எனும் நோக்கில், உலகின் எல்லாப் பகுதிகளிலும், இராணுவ கெடுபிடி உண்டாக்குவதற்கான காரியங்களைச் செய்கின்றது.

ராணுவ ரீதியில் தனது மேலாதிக்கத்தை நிலை நாட்ட கணக்கு வழக்கற்று ராணுவச் செலவுகளைச் செய்து வருகின்றது. புதிய, புதிய அணு ஆயுதங்களைச் செய்வதும், நவீன ஏவுகணைகளை நிறுவியும், அண்ட வெளியிலும் ராணுவத் தயாரிப்புக்களைச் செய்கின்றது.

அமெரிக்காவின் இச் செயற்பாடுகளினால் ஜெனிவா பேச்சு வார்த்தைகளும் நின்று போயின.

ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களென தான் கருதும் பகுதிகளில் எல்லாம் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் கொள்கையை கடைப் பிடித்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா, மத்திய அமெரிக்காவின் கரிபியன் பகுதிகளிலும் தனது ராணுவ ஆதிக்கத்தை பலப்படுத்துகின்றது. கிரெனடா மீது படையெடுத்து அதனை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றது. நிக்கரகுவாவிலும், எல்சல்வடோர் மீதும் போர் மேகங்களை கிளப்பி விட்டும், மத்திய கிழக்கிலும், துருக்கியிலும், தெற்கு ஆப்பிரிக்காவிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் தனது படை நடமாட்டத்தை அதிகப் படுத்தியுமிருக்கின்றது.

இதன் முன் முயற்சிகளுக்காக, அப்பகுதிகளில் உள்ள ஆட்சியாளர்களுக்கு ஆயுத உதவிகளையும், படை பல ஆதரவையும் வழங்கி வருகின்றது.

மேலும், தனது அரசியல் அனுகூலங்களை பாதுகாத்துக் கொள்ளவும், தனது பெரிய பன்னாட்டு கூட்டு நிறுவனங்களின் கொள்ளை லாபத்தை பாதுகாத்துக் கொள்ளவும், சர்வதேச நிதி நிறுவனம், வளர்ச்சி வங்கி ஆகியவற்றில் தனது ஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டுள்ளதுடன் வளர்முக நாடுகளுக்கு பொருளாதார நிதி நிர்ப்பந்தகளையும் உண்டு பண்ணி வருகின்றது.

இப்படியாக, ராணுவ ஆதிக்கத்தின் மூலம் உலகத்தின் மேல் ஆதிக்கத்தை செலுத்த முயன்று வரும் அமெரிக்கா இந்து சமுத்திரப் பிராந்தியப் பகுதிகளையும் விட்டு வைக்கவில்லை.

## இந்து சமுத்திரப் பிராந்தியத்தினுள்

இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் முக்கிய நாடாக திகழ்ந்து கொண்டிருக்கும் இந்தியாவினை தனது பிடிக்குள் கொண்டு வருவதற்காக பல முயற்சிகளை எடுத்து வருகின்றது.

சோவியத் யூனியனுடனான இந்தியாவின் உறவுகளை முறியடிக்கவும், இந்திய அரசின் ஏகாதிபத்திய எதிர்ப்புச் செயல்களை கறையாக்கவும், இந்தியாவினுள் தன்னை நிலைப்படுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா, இந்தியாவிற்கு பல வழிகளிலும், நெருக்கடிகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றது. மட்டுமில்லாமல் இந்தியாவை வலிய சண்டைக்கு இறக்கும் பணியில் நடந்து கொள்கின்றது.

இந்தியாவை முக்கோண சதி வலைக்குள் சிக்க வைக்கும் முயற்சியாக, டியாகோ கார்சியா தீவிலும் பல நவீன ஏவுகணைகளை நிறுவி, இந்தியாவை குறி பார்க்க வைத்திருக்கிறதுடன் இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தானில், நவீன ரக ஆயுதக் குவிப்பு வேலைகளைத் திட்டமிட்டு செய்து வருவதுடன், அணு ஆயுத உற்பத்தியையும் முடுக்கி விட்டுள்ளதுடன், இலங்கையிலும் தனது கைக் கூலியான ஜே.ஆரின் துணை கொண்டு பயங்கரவாத முறியடிப்புக்காகவென்று கூறிக் கொண்டு பல நவீன ரக ஆயுதங்களை குவித்துக் கொண்டிருக்கின்றது.

இப்படியாக ஒரு முக்கோண சதி வலைக்குள் இந்தியாவை சிக்க வைத்துள்ளது ஏகாதிபத்திய அமெரிக்கா.

மேலும், தமிழக மீனவர்களை, சிறிலங்கா அரச பயங்கரவாதிகளின் துணை கொண்டு கொடுமைப் படுத்தி சுட்டுக் கொலை செய்து இந்தியாவினை வலிய சண்டைக்கு இழுக்கும் முயற்சியை செய்யும்படி சிறிலங்கா இனவெறி அரசை தூண்டி விட்டுள்ளது.

இம் முயற்சியே தமிழக மீனவர்கள் மீது சிறிலங்கா பயங்கரவாதிகள் எடுத்த நடவடிக்கைகள் எனலாம். ஆனால், சமாதானத்தை விரும்பும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தை போர்க்களமாக்க விரும்பாத இந்தியாவின் கட்டுப்பாடான நடவடிக்கைகளுக்கு முன் பயனற்றுப் போயும் விடாமல், மேலும், பொறுமையைச் சோதிக்குமாப் போல் நடந்து கொண்டு வருகின்றது.

இந்தியாவுக்கு எதிராக போர் ஒன்றைத் தொடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ள அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் முயற்சிகளுக்கு ஆதரவு கொடுத்து காலால் இட்ட வேலையை தலையால் செய்து ஏகாதிபத்திய ஏஜமானிடம் நல்ல பெயர் வாங்குவதற்கு முனைந்து கொண்டிருக்கும் சிறிலங்கா இனவெறி அரசயந்திரம் தூக்கியெறியப்படுவதே இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கான ஒரு விடிவு நட்சத்திரம் எனலாம். இவ் அரச யந்திரம் தூக்கியெறியப் பட சிங்கள மக்கள் விழித்தெழ வேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது.

சிக்கிக் கொண்டிருக்கும் சிங்கள மக்கள் விழித்தெழ தமிழீழம் அமைவதும் தவிர்க்க முடியாததாகின்றது.

## J. R. இன் அரசியற் தீர்வுகள்....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

வரை அரசியல் தீர்வு என்பது சாத்தியப்படாது. என்பதை அறிவித்து விட்டான்.

மனித நேயம் மதிக்கும் நாடுகளினதும் முக்கியமாக இந்தியாவினது வற்புறுத்தலுக்கு இலக்காகி கூட்டப்பட்ட வட்டமேசை மாநாடு புஸ்வாணமாக போயிற்று. இம் மகாநாட்டுத் தீர்வை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உலக நாடுகளை ஏமாற்றமே கவ்விக் கொண்டது.

பாசிஸ வெறியன் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா, இம் மகாநாடு நடந்த காலகட்டத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நவீன பாணி ஆயுதக் குவிப்பை வெற்றிகரமாக செய்து முடித்து விட்டான்.

சர்வதேச பயங்கரவாதிகளுடன் கரமிணைந்துக் கொண்டு, தமிழ் ஈழத்தில் பயங்கரவாதச் செயல்களை நடத்திக் கொண்டு, வட்டமேசை மாநாட்டுத் தீர்வுகள் பயங்கர வாதம் ஓயும்வரை நடைமுறைப் படுத்தப்படாதெனை, அறிவித்த அரசு மாநாட்டுத் தீர்வுகளை வேறோர் மட்டத்தில் மக்களை ஏற்றுக் கொண்டதாகச் செய்வதற்கு முற்படுகின்றது.

மாநாட்டில் தமிழர் சார்பாகக் கலந்து கொண்டவர்கள் இத்தீர்வுகளை ஏற்கவில்லை. இருப்பினும் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் இம் மாநாட்டை எப்போவோ நிராகரித்து விட்டனர். இப்போது தமிழ் ஈழ மக்களே விடுதலைப் போராளிகளாக மாறிக் கொண்டு வருகின்ற இவ்வேளையில், மாநாட்டுத் தீர்வுகளை மக்கள் ஏற்றுக் கொண்டதாக நம்ப வைப்பதற்கு நாடகமாடுகின்றது இலங்கையரசு!

தமிழர் பகுதியிலுள்ள 8 குழுக்கள் இத் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால், இக்குழுக்கள் அனைத்தும் அரசால் தொற்றுவிக்கப்பட்ட அல்லது, அரச சார்புடைய குழுக்கள்தான் என்பது சொல்ல வேண்டியதில்லை.

இதனிடையே, அண்மையில் இந்தியா மீண்டும் இலங்கையுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது. இதையிட்டு, இரு தரப்பினரும் இனப்பிரச்சனையில் அரசியற் தீர்வு காண்பதில் திருப்தி கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இலங்கைத் தமிழர் விவகாரம், அண்டை நாடுகளுக்குப் பெருந்தலையிடியாய் இருப்பது உண்மைதான். இப்போது, இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றியோ, நடுக்கடலில் தாக்கப்பட்டு வரும் அப்பாவி மீனவர்களைப் பற்றியோ, இலங்கைத் தமிழர் மீது இலங்கை அரச இராணுவத்தினரின் மனித உரிமைகள் மீறிய செயல்களால் கொதிப்படையும் தமிழக மக்கள் பற்றியோ சிந்திக்கும் போது, நிச்சயமாக இந்திய அரசுக்கு இது பெருந் தொல்லை தரும் விஷயமே!

ஆனால், இந்த விவகாரத்தில் அண்டை நாடுகள் — குறிப்பாக இந்தியா சமாதானத் தீர்வுகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்க முற்படுவது, இந்தியாவின் தற்போதய சர்வதேச நிலைமைகளை கருத்திற் கொண்டு பார்க்கும் போது தவறல்ல!

எனினும் நாளாந்தம் அழிக்கப்பட்டு வரும் இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் விவகாரத்திற்கும் இத்தகைய அரசியற் தீர்வுகள் முன் வைக்கும் பேச்சு வார்த்தைகளுக்கும் எந்த விதத்தில் ஒத்துப் போகும் தன்மைகள் உள்ளனவென்பது தான் இப்போது நம்முன்னுள்ள கேள்வி!

இலங்கையின் நேச சக்திகளின் நிர்ப்பந்தத்தின் பேரில், இவ்வாறான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வுகள் பெறப்பட்டாலும் அது நடைமுறையில் திருப்தி தரக் கூடியதாக இருக்குமா என்பது இன்னுமோர் கேள்வி!

எனவே, என்னதான் பேச்சு வார்த்தைகள் நட்த்துவதென்றாலும் தமிழ் பேசும் இனத்தின் சுயநிர்ணய உரிமைகள் பேணப்படக் கூடியதாக இருக்கும் எந்தத் தீர்வையும் முன் வைப்பதே நல்லது. இத்தகைய பிரிந்து போகும் தமிழ் ஈழம் அமைத்தல் போன்ற எல்லைகளில் நின்று பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியற் தீர்வுகள் காண்பதுதான், தமிழ் பேசும் மக்களுக்கான திருப்திகரமான தீர்வுகளாக இருக்கும்.

அல்லது, ஒரே சுதந்திர இலங்கைக்குள்ளேயே சமத்துவம் பேனக் கூடியதாகக் கொண்டு வரும் எந்தத் தீர்வும் — இலங்கையரசின் இப்போதய நிலைமையில் தமிழ் பேசும் மக்களுக்கு திருப்தி தரக் கூடியதாக இருக்காது. தமிழ் பேசும் மக்கள் தலைமைகள், நெருக்குதல்களுக்கு மத்தியில் இத்தகைய சமாதானத் தீர்வுகளுக்கு முன் வந்தாலும் — அது தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரை ஒரு இடைக்காலத் தீர்வாகவே இருக்குமென்பது திண்ணம்.

## பவானுக்கு ஓராண்டு நினைவாஞ்சலி



காப்டன் பவான்

தோழனே!
தமிழ் ஈழ இருள் அகற்ற
எழுந்த ஒளிக்கீற்று நீ!!

எம் உணர்வைப் போல் கொந்தளிக்கும்.
பாக்கு நீரிணை அலை வீச்சு
உன் மூச்சை அணைத்தெடுத்து
ஓராண்டு பூர்த்தியாயிற்று

எம் மக்கள் மரண ஒலியோ
இராணுவத்தின் வேட்டொலிக்குள்
நிஜ வாழ்வோ மரணத்துள்.
நினைவுகளும் கனவுகளும்
விடுதலையின் பாதையிலே கொண்ட
தோழர்களின் பயணங்களில்
வெளிச்சங்கள் மெல்ல மெல்ல
விழிகளுக்குள் புலர்கிறது

சுதந்திரத்தைச் செதுக்கிடவே
தனையீந்த உயிர்களாய்
உன் நினைவு தொடர்கையில்
எம் பயணம் இன்னும் இன்னும்
வேகம் பெறும்.

படிப்பகம்